உ

வந்தேமாதரம்.

# மகாத்மா காந்தியடிகள்

# அஷ்டோத்ரசதமும்

# ஜீவிய சரித்திர சங்கிரகமும்



OFFICE OF THE REGIS...
27 SEP 193..
MADRA..

இஃது

கோரடாச்சேரி சரஸ்வதிமால் தலைவர் &

களத்தூர் மேல்கரை மிராசு

மே. ச. துரைசாமி பிள்ளை அவர்களால்

எழுதப்பெற்று

மகாத்மா காந்தியடிகள் கோரடாச்சேரிக்கு

விஜயம் செய்த காலத்தில் வாசித்துக்கொடுக்கப்பட்டது.

இரண்டாம் பதிப்பு.

மன்னார்குடி பாரதி பிரஸில், பதிப்பிக்கப்பட்டது.

[Reserved] 1934 [விலை அணா 4.

3UG
N34
171603

# முகவுரை.

---

அஹிம்சா மூர்த்தியாம் காந்தியடிகள் இவ்வுலகத் மாபெருந் தலைவராய் விளங்குகிறார். அவர் நாமத்தை மகிமையையோ அறியாதார் யாரும் இல்லை யென்றே கூறல மகாத்மா காந்தியைப் பார்க்கவும், அவர் இனிய மொழிகளை செவிமடுக்கவும், யாவர் மாட்டும் அவா எழுகின்றது. இதற்கு காரணந்தான் என்ன? எண்ணிறந்த கோடிமக்கள் வதியு அகில உலகில் திரிகரண சுத்தியாய் வாழ்க்கையை நடத்தி செல்லும் தன்மையன்றோ! மனித சக்தியில் பொதுஜன சேவையை எத்துணை ஆற்றமுடியுமோ அவ்வளவில் சிறிதும் குறைந்திருப்பதாகக் காணமுடியாது. அவருடைய உள்ளம் தெளிந்த ஜலம் போன்று மாசற்று விளங்குகிறது. உள்ளத்தில் சன்மார்க்க எண்ணங்களே உதிக்கின்றன. எதை எண்ணுகிறாரோ அதையே வெளியிடுகிறார். வெளியிட்டவாறே செய்கையில் காட்டுகிறார். தெய்வபக்தி, சத்தியம், அஹிம்சை, எளிய வாழ்வு, சகிக்குந்தன்மை, உண்மை, அன்பு, இவ்வாழ்வின் இலக்ஷியம், சகோதர தத்துவம், உயர்வு தாழ்வு பாராட்டாமை, பிரமசரியம், உயரிய ஆத்மஞானம் போன்ற சீரிய கொள்கைகளையுடைய மகானின் உபதேசங்கள் நமக்கு இகபர மோக்ஷங்களைக் கொடுக்கும். இவ்வளவு பெருமை பொருந்திய மகானின் சரித்திரத்தைப் படிக்க நான் அளவில்லா ஆவல் கொண்டு இப்புத்தகத்தின் பின்னால் கண்ட நூல்களையும், காந்தி, சங்கு முதலிய பல வர்த்தமானப் பத்திரிகைகளையும், பொன்மலர்களையும் படித்துவந்தேன். நேரில் தெரிசித்து அனுக்கிரகமும் பெற்றேன்.

அந்நூல்கள் சிற்சில விஷயங்களை எடுத்துக்கொண்டு விரிவாய் உரைப்பதாலும் அவைகளும் பல நூல்களாகவும், விலை ஏறப்பெற்றனவாயும் நீண்டகாலம் படிக்கவேண்டுவனவாயிருப்பதாலும் நம் சகோதர சகோதரிகள் குறைந்த கிரயத்திற்குப் பெற்றுக் குறுகிய காலத்தில் எளிதில் கற்றுத் தேசத்தொண்டு செய்யவேண்டுமென்ற ஆவல் மிகுதியால் இந்நூலை வெளியிடலானேன். வாசகர்கள் இப்புத்தகத்திலுள்ள சாராம்சங்களைக் கொள்ளவும், அறிவுடையோர் அஸாராம்சங்களையும் மலிந்த பிழைகளையும் தள்ளவும் வேண்டுகின்றேன்.

கோடாச்சேரி
9—9—1934

இப்படிக்கு,
**மே. ச. துரைசாமி பிள்ளை,**
சாஸ்வதிமால் தலைவர்.

உ

வந்தேமாதரம்.

# மகாத்மா காந்தியடிகள்

## சரித்திர சங்கிரகம்.

OFFICE OF THE REGI…
27 SEP 19
MADRA

### 1. அஷ்டோத்ர சத நாமாவளி.

**சங்கற்பம்.**

சுக்லாம் பரதரம் சாந்தயே பிராணயாமம்.

யமோ பாக்த ஸமஸ்த துரிதக்ஷயத்வார, ஸ்ரீபரமேஸ்வர ப்ரீத்யர்த்தம். ஸ்ரீமுக நாம ஸம்வஸ்த்ஸரே உத்தராயணே கும்ப மாஸே சுக்கிலபக்ஷே துதியாம் சுபதிதௌ, குருவார யுக்தாயாம் பூர்வப்ரோஷ்டபதா நக்ஷத்திர யுக்தாயாம் சுபயோக சுபகரண ஏவங்குண விசேஷண வசிஷ்டாயாம் அஸ்யாம் தஞ்சை சமஸ்தானே கொரடாச்சேரி விஜயகாலே மக நக்ஷத்ரே சிம்மராசௌ ஜாதாயாக சகுடும்பஸ்ய சர்வா பீட பரிகாரார்த்தம் ஸர்வலோக பீடா நிவர்த்தியர்த்தம் ஸமஸ்த ஹரிஜன ஸ்ரம பரிகாரார்த்தம் மோகனதாஸ் காந்தி கிருபா கடாக்ஷ ஸித்தியர்த்தம் காந்தி பாதாரவிந்த யோக அஷ்டோத்தர சதநாம பத்திர புஷ்பேண அர்ச்சனம் கரிஷ்யே.

---

அரிஜனப் பிரியாய நம:
அஹிம்ஸாப் பிரியாய நம:
அவதார புருஷாய நம:
அன்பு மயாய நம:
அரிஜன கன்னிகை சுவீகாராய நம:
அஜக்ஷீரபானப் பிரியாய நம:
அரிலால் காந்தி பிதிரே நம:
அஷ்டா தசதின ஜனனுய நம:
இராமதாஸ் காந்தி பிதாய நம:
உலக சிரேஷ்டாய நம: 10
உபவாசப் பிரியாய நம:
உத்தம சந்திர காந்தி தௌஹித்திராய நம:
எங் இந்தியா ஸ்தாபகாய நம:
எளிய வாழ்வுகராய நம:
ஏகபத்தினி விரதாய நம:
கஸ்தூரிபாய் காந்தாய நம:
கவி காஸ நாய நம:
களங்கரகிதாய நம:
கதர் வஸ்திர தாரிணே நம:
கன்னியா மாஸ ஜனனுய நம: 20
கனிஷ்ட புதல்வாய நம.
கருணாகராய நம:
கதராடை ஸ்தாபகாய நம:
காராக்கிரஹப் பிரவேசாய நம:
காங்கிரஸ் சர்வாதிகாரியே நம:
காபாகாந்தி புத்திராய நம:
க்ஷீரஸ்ரவணப் பிரியாய நம:
கூர்ஜரதேச வாஸியே நம:
கெய்சரி ஹிந்து மெடல்தராய நம:
கெய்சரி ஹிந்து மெடல் நிக்கிரகாய நம. 30
கொரடாச்சேரி விஜயாய நம:
கோபாலகிருஷ்ண கோக்கலே சிஷ்யாய நம:
சத்தியாக்கிர ஹாஸ்ரமஸ்தாபகாய நம:
சர்வசங்கப் பரித்தியாகாய நம:
சரோஜினி தேவிகுரவே நம:
சர்வமதப் பிரியாய நம:
சர்வஜனப் பிரியாய நம:
சத்தியசோதனைக் கிரந்த கர்த்தாய நம:
சபர்மதி ஆஸ்ரம ஸ்தாபகாய நம:
சத்திய விரதாய நம:- 40

171603



சமாதானப் பிரியாய நம:
சர்வ மங்களகராய நம:
சஜ்ஜனப் பிரியாய நம:
சாந்தி சிகாமணயே நம:
சாஸ்திர நிபுணாய நம:
சாந்த புருஷாய நம:
சார்ஜண்ட் மேஜராய நம:
சிம்ம லெக்கினாய நம:
சுக்கில ஸம்வத்ஸர ஜனனாய நம:
சுதர்மாபுரி ஜனகாய நம; 50

தவ சிரேஷ்டாய நம:
தயாளுவே நம:
தர்மிணே நம:
தாசானு தாசாய நம:
தியாக புருஷாய நம:
திக் விஜயாய நம:
திகம்பராய நம:
தியாகமூர்த்தயே நம:
தீனதயாளுவே நம:
தீண்டாமை நிக்கிரகாய நம: 60

தேவதாஸ் காந்தி புத்திரப்
பிரியாய நம:
தேவ தூதாய நம:
தேசிய வாசகசாலா ஸ்தாபகாய
நம:
திஷ்டதோஷாய நம:
நியாய வாதியே நம:
நெட்டால் காங்கிரஸ் ஸ்தாபகாய
நம:
பரிபூரணாய நம:
பக்த வத்ஸலாய நம:
பகவத் பிரியாய நம:
பரம சாந்தாய நம: 70

பணியா வர்ணாய நம:
பரோபகாராய நம:
ப்ரபவே நம:
பாபரகிதாய நம:
பாரதமாதா அருந்தவப் புதல்வாய
நம:
பாரதமாதா துவஜஸ்தாபகாய நம:
பிரமசரிய விரதாய நம:

புருஷோத்தமாய நம:
புண்யாய நம:
புத்திர பௌத்திர பார்யாதி
ஐஸ்வர்யாய நம: 80

புத்திலிபாய் சுதாய நம:
பெல்காம் காங்கிரஸ் அதிபதியே
நம:
போர் பந்தர்வாசிநே நம:
போயர் யுத்த சேவகாய நம:
மக நக்ஷத்திர ஜனனாய நம:
மகா புருஷாய நம:
மகா தபசியே நம:
மதுமாம்ஸ நிக்கிரகாய நம:
மகாத்மநே நம:
மணிலால் காந்தி பிதாவே நம: 90

முனீந்திராய நம:
மோகனதாஸ் காந்திநே நம:
யோக புருஷாய நம:
யோகாய நம:
ராட்டினேத்தாரணாய நம:
ராஜகோபால சம்பந்தியே நம:
ரௌலட் சட்ட சத்தியாக்
கிரஹாய நம:
லார்டு இர்வின் ஒப்பந்தகராயநம:
லெக்ஷ்மி நுஷாய நம:
வசீகராய நம: 100

வல்லபாய் படேல் சிஷ்யப்
பிரியாய நம:
வட்டமேஜா இந்தியப் பிரதி
நிதியே நம:
வாலண்டியர்படை ஸ்தாபகாய
நம:
வைசிய குலாய நம:
வைஷ்ணவாய நம:
டண்டி லவண சத்தியாக்கிரஹாய
நம:
ஸ்திரவார ஜனனாய நம:
ஜிதேந்திரியாய நம: 108

**நானாவித மந்திர புஷ்பம் சொர்ண புஷ்பம் சமர்ப்பயாமி.**

வந்தே மாதரம்.

# மகாத்மா காந்தியடிகளின்

## சரித்திர சங்கிரகம்.

### 2. வம்சம்.

பாரத தேசமாகிய இந்தியாவின் வடமேற்கிலுள்ள பம்பாய் மாகாணத்தில் குஜராத் தேசத்தில் போர்பந்தர் என்று வழங்குகிற சுதர்மாபுரியில் மகாத்மா காந்தியின் வம்சமிருக்கிறது. அவர்கள் பனியா (வைசிய) ஜாதியைச் சேர்ந்த வைஷ்ணவர்கள். பாஷை குஜராத்தி.

பிதாமஹர் உத்தமசந்திர காந்தியும், பிதா காபாகாந்தியும், கத்தியவார் முதலான சமஸ்தானங்களில் முதன் மந்திரிகளாகவும், திவான்களாகவுமிருந்து, ராஜ்ஜியபாரத்தை சிறப்புடன் நடத்திய உத்தமர்கள். மாதாபுத்திலிபாய் கீர்த்திமிக்க உயர் குடும்பத்தில் தோன்றி தெய்வ பக்தியில் சிறந்த கற்பரசி. இப்புண்ணிய தம்பதிகளுக்கு மூன்று புதல்வர்களும், ஓர் பெண்ணும் தோன்றினர். இவர்களில் கனிஷ்டரே உலகம்போற்றும் காந்தியடிகள். அன்னாரின் **திருநாமம் மோகனதாஸ் கரம் சந்த் காந்தி.**

### 3. ஜெனனம்.

1869ம் வருஷம் அக்டோபர் மாதம் இரண்டாந்தேதிக்குச் சரியான, கலியுகாதி 4970 சுக்கில வருஷம் கன்னியா மாதம் பதினெட்டாந் தேதி ஸ்திரவாரம் மக நக்ஷத்திரம் உதயாதி 54 நாழிகைபளவில் சிம்ம லக்னத்தில், லக்னத்தில் சந்திரன், 2ல் சூரியன் புதன், 3ல் சுக்கிரன், அங்காரகன், 4ல் சனி, 6ல் கேது, 10ல் குரு, 12ல் இராகு, இவ்வாறு கிரகங்கள் அமையப் பெற்ற சுபதினத்தில் உலகத்தை உஜ்ஜீவிக்க வந்த மகாத்மா காந்தியடிகள் பாரதமாதாவின் அருந்தவப் புதல்வராய் திரு அவதாரமானார்.

### 4. கல்வி.

1876ல் அவர் தமது 7வது வயதில் இராஜகோட்டையில் பிரதமக் கல்வியும், 12வது வயதில் ஹரிஜனங்களுடன் உயர்தரக் கல்வியும் பயின்று, 1887ல் மெட்ரிகுலேஷன் பரீக்ஷையில் தேறினார். இரண்டாவது வகுப்புக்குப் பிறகு பரிசுகளும் 5, 6வது வகுப்பில் உபகாரச் சம்பளமும் கிடைத்தது.

மதுபானம், மாமிச போசனம், அயல் மாதரின்பம் முதலிய வைகளை ஒழிப்பதாகத் தமது மாதா கோரியபடி பிரதிக்ஞை செய்து, பந்துக்கள் செய்த ஜாதிக்கட்டுப்பாட்டையும் லெக்ஷியம் செய்யாது, 1887ஹ செப்டம்பர் மாதம் நாலாம் தேதி 18வது வயதில் பிரயாணமாகி லண்டன் சென்று பாரிஸ்டருக்குப் படித்துத் தேர்ச்சிபெற்று, 1891 ஜூன் மாதம் 10ம் தேதி பாரிஸ்டர் கோஷ்டியில் சேர்க்கப்பெற்று, 12ம் தேதி தாயகம் திரும்பினூர். இங்கிலீஷ், பிரஞ்சு, லத்தீன், குஜராத்தி, தமிழ், உருது, ஸம்ஸ்கிருதம், இந்துஸ்தானி பாஷைகள் கற்றறிந்த பண்டிதருமாவார்.

### 5. குடும்ப வாழ்க்கை.

1882ல் பதின்மூன்றுவது வயதில் ஸ்ரீமதி கஸ்தூரிபாயை பாணிக்கிரகணம் செய்தார். அவர்களும் தன் பதியின் கொள்கைப்படி பொதுஜனசேவையில் ஈடுபட்டு அயல் நாடுகளுக்குப் பதியுடன் சென்றும் சத்தியாக் கிரகத்தில் ஈடுபட்டு பின் பன்முறை சிறைவாசம் செய்தும் தேசத்தொண்டாற்றி வருகிறூர். இக்கலியில் சர்வபோக போக்கியங்களையும் துறந்து யவ்வன பருவத்தில் பிர்மசரிய விருதத்தை அனுஷ்டித்து வரும் உத்தமிக்கு ஒப்பாரும் மிக்காரு மிலர்.

இப்புண்ணிய தம்பதிகளுக்கு காலக்கிரமத்தில், ஹரிலால் காந்தி 1, மணிலால் காந்தி 2, இராமதாஸ் காந்தி 3, தேவதாஸ் காந்தி 4, என நான்கு புத்திரர்கள் தோன்றினர். புத்திரியில்லாக் குறையை நிவர்த்திக்க ஒரு ஹரிஜனக் கன்னிகை லெக்ஷ்மியை ஸ்வீகாரம் செய்துகொண்டு அவளிடம் அன்பும் இரக்கமும்காட்டி போற்றி வருகிறூர். தவ சிரேஷ்டர்களாகிய மாதாபிதாவின் உதரத்தில் ஜெனித்த தேவதாஸ் காந்தியும் அவர்களைப்போல பொதுநல ஊழியத்தில் ஈடுபட்டு சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் மகள் லெக்ஷ்மியை கலப்புமணம் புரிந்து அரசாங்கக் கட்டளையை அலக்ஷியம் செய்து விவாகமான சில தினத்தில் காதலியைப்பிரிந்து காராக்கிரஹம் சென்ற சிம்மமாவார்.

இம்மட்டோ இளம்பிராயமுடைய தெளகித்திரரும் முன்னேர்கள் தொண்டிலீடுபட்டு இராஜாங்க கட்டளையை மீறி சிறை சென்ற வீரராவர். இவர்களை அரிச்சந்திரன், சந்திரமதி, தேவதாஸன் இவர்களுக்கு ஒப்பிடல் மிகைபடாது.

## 6. சத்தியம்.

பன்னிரெண்டாம் வயதில் அரிச்சந்திர நாடகம் பார்த்த போது அரிச்சந்திரனைப்போல் ஏன் எல்லோரும் சத்தியவந்தனாக இருக்கக்கூடாது என்று இரவும் பகலும் சிந்தனை செய்வார். சத்தியத்தைக் கடைப்பிடித்து நின்ற அரிச்சந்திரன் பட்ட துன்பங்களையெல்லாம் அனுபவிக்கவேண்டுமென்ற இலக்ஷியம் உள்ளத்தில் குடிகொண்டது.

சன்மார்க்கமே எல்லாவற்றிற்கும் அடிப்படை என்றும், சத்தியமே சன்மார்க்கத்தின் சாரம் என்றும், உறுதிகொண்டார். எனவே சத்தியமே அவருடைய வாழ்க்கையின் குறிக்கோளாயிற்று. நாளுக்குநாள் அது வளரத் தொடங்கியது. அதற்கு அவர் கொண்ட பொருளும் விரிவாகி வந்தது.

சத்தியத்தைத் தேடிச் செல்லும்போது கோபம், சுயநலம், பகைமை முதலியவை இயற்கையாகவே நழுவி விடுகின்றன. இல்லாவிடில் சத்தியத்தை அடைவது இயலாத காரியமாகும். காமக்குரோதங்களுக்கு வயமான மனிதன் நல்ல எண்ணங்கள் உடையவனாய் இருக்கலாம்; மெய்யே பேசலாம்; ஆனால் அவன் ஒருக்காலும் சத்தியத்தைக் காணமாட்டான். அன்பு, பகை, இன்பம், துன்பம் எனும் இரட்டைக்குணத் தொகுதியிலிருந்து விடுதலை பெறுவதே சத்தியத்தைத் தேடும் முயற்சியில் வெற்றி பெறுவதாகும்.

படிக்கும் காலத்தில் உபாத்தியாயரிடத்திலாவது, பள்ளிச் சிறுவர்களிடமாவது, எப்போதேனும் பொய் சொன்னதாக அவருக்கு ஞாபகமில்லை.

பள்ளிக்கூட பரீக்ஷை காலத்தில் அவர் 'கெட்டில்' என்னும் பதத்தைப் பிசகாய் எழுதியதைப் பார்த்த உபாத்தியாயர், அடுத்த பையனைப் பார்த்து காப்பி அடிக்கும்படி ஜாடை செய்தும் பயனில்லை. காப்பி அடிக்கும் வித்தை அவருக்கு வரவேயில்லை.

சத்தியத்தையன்றி வேறு கடவுள் இல்லை என்னும் கொள்கைக்கு அவர் அனுபவங்களெல்லாம் ஒருமுகமாக உறுதியளித்

திருக்கின்றன. நாம் தினந்தோறும் பார்க்கும் சூரியனுடைய பிரகாசத்தைவிடக் கோடி மடங்கு ஜோதியுடையது சத்தியம். அந்தப் பரஞ்ஜோதியில் அவர் கண்டது அணுவிலும் அணுவான ஒளிக்கிரணமேயாகும். ஆனால் அவருடைய சோதனைகள் அனைத்தினுடைய பயனாகவும் ஒன்று அவர் உறுதியாக சொல்லமுடியும். அதாவது, கோடி சூரியப்பிரகாச முடைய சத்தியமென்றும் ஜோதியைப் பூரணமாகத் தரிசனம் செய்ய வேண்டுமானால் அஹிம்ஸா பரமோதர்ம: என்னும் வடமொழிக் கிணங்க அஹிம்ஸா தர்மத்தையன்றி அதற்கு வேறு சாதனம் இல்லையென்பதேயாகும். புவனமனைத்திலும் ஊடுருவி நிற்கும் சத்தியப் பொருளை நேருக்கு நேர் காண விழையும். ஒருவன் படைப்பில் மிகத் தாழ்ந்தபடியிலுள்ள உயிரையும் தன்னைப் போலவே நேசிக்கும் ஆற்றல் பெறவேண்டும். ஆத்மத்தூய்மை செய்துகொள்ளாத வரையில் உலகிலுள்ள ஒவ்வோர் உயிரினிடத்தும் தன்னை ஒன்றுபடுத்திக்கொள்ளுதல் இயலாத காரியம். ஏனெனில் ஆத்மத்தூய்மையின்றி அஹிம்சா தர்மத்தைக் கடைப்பிடிக்கலா மென்று எண்ணுவது வெறும் பகற் கனவாகவே முடியும். இதய பரிசுத்தம் இல்லாதவன் ஒருநாளும் இறையொளி காண இயலாது. ஒருவன் பூரண பரிசுத்தனாக வேண்டுமானால் மனோவாக்கு காயங்களினால் காமக்குரோதங்களை முற்றும் விலக்கியவனாகவேண்டும்.

## சத்திய விரதம்.

சாதாரணமாக ஒருவன் பொய் பேசுவதில்லை என்றிருந்தால்மட்டும் போராது. தேசத்தின் நன்மையை மதித்து வஞ்சகமாகப் பேசவும், நடக்கவும் கூடாது. பெற்றோருக்கும், பெரியோருக்கும் எதிர் நேர்வதாயினும், மெய்யே பேசவேண்டும்; இதற்கு பிரகலாதன் சாக்ஷி.

பதியிழந்தனம், பாலனை யிழந்தனம், படைத்த
நிதி யிழந்தன மினிஎமக்குள தென நினைக்கும்
கதியிழக்கினும் கட்டுரை யிழக்கிலேம்.

என்ற அரிச்சந்திரன் போல தானும் சத்தியசந்தனாகயிருக்கவேண்டுமென்ற வைராக்கியம் பிறந்தது.

## 7. பிரமசரியம்.

விவாகமான நாளிலிருந்தே ஏக பத்தினி விரதத்தில் அவர் உறுதிகொண்டவராக இருந்தார். ஆழ்ந்த சிந்தனை செய்த பின்னர் 1906ல் அவர் பிரமசரிய விரதம் பூண்டார். அவர் மனையாளிடம் கலந்து பேசினர் அவர் ஆட்சேபம் எதுவும் கூற வில்லை. 1901ம் ஆண்டிலிருந்தே புலனடக்கத்துறையில் முயன்று ஓரளவு வெற்றிபெற்று வந்தார். ஆனால் 1906ல் விரதம் பூண்ட பின்னர் அவர் பெற்ற சுதந்திர ஆனந்தத்தை அதற்குமுன் எப்போதும் அடைந்ததில்லை. அதன் அரிய சக்திகள் அவருக்கு நாளுக்குநாள் நன்கு புலனாகின.

உடல், மனம் ஆன்மா என்னும் மூன்றையும் காப்பாற்று வது பிரமசரியமே. அது ஆனந்தமும் ஆறுதலும் தரும் ஓர் அரிய சாதனமாகிவிட்டது. தினந்தோறும் அதனிடம் ஒவ் வொரு புதிய அழகைக்கண்டு வந்தார்.

பிரமசரிய விரதங் காப்பதற்கு முதலாவது இன்றியமை யாத நிபந்தனை சுவைப்புலனடக்கமாகும். பிரமசாரிக்குச் சிறந்த உணவு புதிய பழங்களும் கொட்டைப் பருப்பு வகைகளுமே. பால் காமக் கிளர்ச்சியை உண்டுபண்ணும் உபவாசமும் அவசி யம். சிற்றின்ப ஆசைகளுக்கெல்லாம் மூலவேர் மனமேயாகும். பிரமசாரி ஆண்டவன் மகிமைகளைப் பார்க்கிறான். மற்றவனோ தன்னைச் சுற்றிலும் நிகழும் நெறியற்ற செயல்களைப் பார்க் கிறான் பிரமசாரி ஆண்டவன் புகழைத்தவிர வேறெதையும் கேட்பதில்லை. மற்றவன் செவியிலே ஆபாசப் பேச்சுகளே விழு கின்றன. இவ்வாறு அவ்விருவரும் வடதுருவத்தையும், தென் துருவத்தையும்போல் அகன்றுள்ள வாழ்க்கை நடத்துகிறார்கள்.

பிரமசாரியமென்றால் மனோவாக்குக் காயங்களினால் புல னடக்கம் பெறுதல் என்றே பொருள். தன் ஹிருதய அந்தரங் கத்தின் மூலை முடுக்குகளையும் சோதித்து அங்குள்ள சிற்றின்ப ஆசைகளைக் கண்டுபிடித்து அவற்றைத் துரத்த ஓயாது முயற்சி வேண்டும். இறைவன் பதம் பெறவேண்டு மென்னும் நோக்கத் துடன் பிரமசரியத்தைக் கடைப்பிடிக்க விரும்புவோர் தங்கள் சுய முயற்சியில் எத்தனை நம்பிக்கை வைக்கிறார்களோ அவ்

வளவு ஆண்டவனிடம் நம்பிக்கை உள்ளவர்களாக யிருக்க வேண்டும். மோட்சத்தை நாடுவோனுக்கு இறைவன் நாமமும் அருளுமே கடைசியான சாதனங்களாகும்.

பிரமசாரிய விரதம் ஒரு கேடயமாக இருந்து தன்னைக் காப்பாற்றும் என்னும் உறுதி அவருக்கு ஏற்பட்டது. பிரமசரியத்தின் அரிய சக்திகள் நாளுக்குநாள் நன்கு புலனாகின. அவர் போனிக்ஸில் இருந்தபோது 37வயதில் பூரணமாக பிரமசரிய விரதம் பூண்டார். புலன்களை அடக்குவதில் வெற்றி பெற்றவன் உலகத்தையே ஜெயித்தவனாகிறான். பிரமசரிய விரதத்தைப் பூரணமாய் அனுஷ்டிப்பதே பிரமஞானப்பேறாகும்.

## பிரமசரியத்தின் எண்வகைகள்.

1. யாதொரு ஸ்திரீயையும் நினையாமை.
2. ஸ்திரீயின் சிலாக்கியத்தைப் பற்றி வர்ணிக்காமை.
3. ஸ்திரீயோடு ஸரசமாடாமை.
4. காமக்கண்ணோடு ஒரு ஸ்திரீயைப் பார்க்காமை.
5. ஒரு ஸ்திரீயைப்பற்றி ஞாபகமே கொள்ளாமை.
6. ஒரு ஸ்திரீயோடு அந்தரங்க வார்த்தையாடாமை.
7. ஒரு ஸ்திரீயோடு பரஸ்பர தரிசனம் பண்ணாமை.
8. ஒரு ஸ்திரீயை எவ்விதமாயும் தொடாமை.

இந்திரியம் சிதரிப்போவதால் பலம், மனோதத்துவம், வீரதத்துவம், வைராக்கியம், அழகு, ஞாபக சக்தி, ஆயுசு இவைகளை இழந்துபோக வேண்டியதாக இருக்கிறது.

நீண்ட ஆயுளோடிருக்கவும், சகல வியாதிகளின்றும் நீங்கியிருக்கவும், ஜீவன்தர்களாக இருக்கவும் விரும்புகிறவர்கள் எல்லோரும் பிரமசரியத்தை அனுசரிக்கவேண்டியது அதிமுக்கியமானது. அதை அப்பியசிக்க மேல்கண்ட எட்டு அமிசங்களையும கவனிக்கவேண்டும்.

அநுமாருடைய வீரத்தனமான காரியங்களை அறியாதவர் எவருமிரார். அவர் ஆயிர மைல் அளவுள்ள கடலைத் தாண்டினதும் எண்ணிறந்த ராக்ஷசர்களை தோற்கடித்ததும் பிரமசரிய விரதத்தை ஆயுள் விரதமாகக் கொண்டமையாலேயே.

பிரமசரியத்துக்கு உணவு வகைகளை தெரிந்தெடுத்தலும், உபவாசமும் அவசியமாகும். புலன்கள் கட்டுக்கடங்காது ஓடும் இயல்பின. எல்லாப் புறங்களிலும், மேலும் கீழும் சுற்றிலும் வேலி எடுத்துத் தடுத்தாலன்றி அவற்றை அடக்கி வைத்தல் இயலாது. மனிதன் இந்திரிய விஷயங்களைப்பற்றிச்சிந்திப்பதனால் அவற்றில் பற்று உண்டாகிறது. பற்றுதலிலிருந்து ஆசை பிறக்கிறது. ஆசை குரோதமாகக் கொழுந்துவிட்டெரிகிறது. குரோதத்தினால் சிந்தை மயக்கமும், அதிலிருந்து நினைவுத் தவறுதலும் உண்டாகின்றன. நினைவுத் தவறுதலால் புத்தி நாசமடைகின்றது. புத்தி நாசத்தால் மனிதன் அழிகிறான்.

## 8. அஹிம்ஸை.

அஹிம்ஸா பரமோதர்ம:
"மன்னுயிர் யாவையுந் தன்னுயிர்போல்
காக்கும் மாதவம் போல்
பின்னொரு மாதவம் இல்லை கண்டாய்ப்
பேதை நெஞ்சே"

ஜீவராசிகளைச் சிருஷ்டிக்கும் சக்தி மனிதனுக்கில்லை. ஆகவே உலகில் உயிர்பெற்று உலவும் எந்த ஜீவனையும் துன்புறுத்தவோ அல்லது அழிக்கவோ அவனுக்கு உரிமை கிடையாது. படைத்தவனுக்கே அழிக்கும் அதிகாரம் உண்டு. அஹிம்ஸை என்பது உடல் பூர்வமாக பிறருக்கு ஹிம்சை செய்யாமலிருப்பது மட்டுமல்ல. மனோ, வாக்கு, காயம், என்ற மூன்றினாலும் நாம் பிறருக்கு ஹிம்ஸை யுண்டாக்காமலிருப்பதே அஹிம்ஸையாகும். அஹிம்ஸையைக் கடைப்பிடிப்பவனுக்கு அன்பே துணைக்கருவி. நமக்குத் தீங்கிழைப்பவரை நாம் வெறுத்துத் தள்ளக்கூடாது. அவர்மீது அன்புகாட்டி, அவரிடமுள்ள தீயகுணத்தைப் போக்கிவிடவேண்டும்.

அஹிம்ஸைத் தத்துவம் நம் நாட்டு ரிஷிகளுக்கும், ஞானிகளுக்கும் மட்டும் ஏற்பட்டதல்ல. சாமானிய ஜனங்களுக்காகவே அது ஏற்பட்டது. மிருகங்களிடம் எப்படி மிருக சக்தி மிளிர்கின்றதோ அப்படியே நம்மிடம் அஹிம்ஸா சக்தி ஜொலிக்க வேண்டும். நான் தன்னந்தனியனாய் நிற்க நேரிடினும் சரி, உலகி

ளுள்ள ஹிம்ஸைக்குணத்தை என் உயிருள்ளளவும் எதிர்த்தே தீருவேன். என் யாத்திரையின் முடிவு உலக சமாதானமே. நமக்குக் கோபமும், ஆத்திரமும் உண்டாகும்போது அவற்றை அடக்கி, மனத்தை அன்பு மயமாக்கவேண்டும். கோபத்துக் கிடங்கொடுப்பவன் ஒரு சில நிமிஷங்களுக்குத் தன்னையே மறந்து மிருகமாகின்றான். அஹிம்ஸா தர்மம் நாளடைவில் அடக்கத்தைக் கொடுக்கிறது. அந்தத் தர்மத்தை அனுஷ்டிப்பவனுக்கு ஆண்டவனே துணைவன். அடக்கத்துடன் அன்பு காட்டினால்தான் ஆண்டவன் அடிநிழலை நாமடைய முடியும். பகைமை எதையும் அழிக்கின்றது; அன்பு எதையும் வளர்க்கின்றது.

இன்சொல்லாலன்றி இருநீர் வியனுலகம்
வன்சொலால் மகிழாது.
சாந்த குணமும் அஹிம்ஸா தர்மமும் தாரணிமேல்
மாந்தர் மனதை ஒரு மந்திரம் போற் கட்டுமடி.

## 9. ஆன்மசக்தி.

ஆன்மசக்தியால் உண்டாகாத காரியம் ஒன்றுமில்லை. ஆன்ம சக்தியோ போக போக்கியங்களைக் கொடுக்கும். ஆன்ம சக்தியோ சங்கநிதி, பதுமநிதி இரண்டையும் கொடுக்கும். ஆன்ம சக்தியோ சகல மணி மந்திரங்களைக்கொடுத்து அவைகளினால் சித்திகளையும் கொடுக்கும். ஆன்மசக்தியோ சாயுச்சிய பதவியைத் தந்தருளும். ஆன்மசக்தியோ சகல இஷ்டங்களையும் தேஜஸையும் விவேகத்தையும் கொடுக்கின்றது. பலம், தைரியம் ஜெயம் முதலியவைகளையும் கொடுக்கிறது. ஆன்மசக்தியினாலல்லவோ பண்டை ருஷிகள் யாவருக்கும் கிட்டாத மனோவாக்குக்கும் எட்டாத பகவானைத் தரிசித்து வந்தார்கள்.

ஆன்மசக்தியினாலேயே பூர்வம் வசிஷ்டர் கௌசிகராசனைத் தோல்வியடைய வைத்தார். தோல்வியடைந்த கௌசிகராசன் வசிஷ்டரின் யோகதண்டத்தின் பலத்தையும், ஆன்மசக்தியின் ஜெயத்தையும் கண்டு பிரம்மதேஜோ பலம் பலம் என்று கூறி மணிமுடியைத் துறந்து சடைமுடித்தாங்கி தவத்திற்குச் சென்று, விஸ்வாமித்திர ரிஷியாகிப் புதிய சிருஷ்டியை யெல்லாம் ஆத்ம சக்தியால் செய்தார். இரணியன் தனது ஆணவத்

தாலும், அகங்காரத்தாலும் இறுமாப்புக்கொண்டு தன் புத்திரனை பிரகலாதாழ்வாரை சமுத்திரத்தில் எறியச்செய்தும்; சமுத்திரம் பிரகலாதனை யமுழ்ந்தாமல் சாந்தி நிலையில் வைத்தது; மலைமீதிருந்து தள்ளப்பட்டும் பூமி இருகையிலும் தாங்கியது. திக்கஜங்களோ முன்போகமுடியாமல் தத்தளித்தன; கால சர்ப்பங்களோ சாந்தி மூர்த்தியைக் கண்டவுடனே சீற்றமின்றிப் பணிந்து சாந்தியை அடைந்தன. இவ்வளவு வைபவத்தையும் பிரகலாதன் அடைந்தது தன் ஆத்மசக்தியினாலேயே. பால் மணம் மாறாச் சிறுபிராயத்திலிருந்த துருவன் உயர்பதவியைக் கொண்டதும் ஆன்மசக்தியினாலேயே. மார்க்கண்டேயர் மரவியையும் வென்று என்றும் பதினாறு வயதுடையவரானது ஆத்ம சக்தியினாலேயே. நமது பரதகண்டத்தில் எண்ணிறந்த சித்தர்களும், ருஷிகளும், யோகிகளும் சகலசித்திகளையும் அடைந்தது ஆத்மசக்தியாலேயே சங்கரர், இயேசுநாதர், முகம்மதுநபி, புத்தர் முதலானோர்களும் ஆத்ம சக்தியினாலேயே உலகத்தில் மதங்களைச் சித்தாந்தப்படுத்தினார்கள். அப்பர்சுவாமிகள் நீற்றறையிலும் சமுத்திரத்திலும் எறியப்பட்டும் ஒரு துன்பமும் அடையாமல் வெற்றியடைந்தார்.

மகாத்மா காந்தியும் 'ஆத்ம பலம்' என்னும் மதத்தைப் பொது மதமாக ஸ்தாபித்துவிட்டார். ஆகவே, ஆன்ம சக்தியடையவேண்டிய உபாசனைகளை அடைய நாம் ஒவ்வொருவரும் முயற்சிக்கவேண்டும். இன்மொழி, அஹிம்சை, சாந்தம், சமத்துவம், சத்தியம், இந்திரிய நிக்கிரஹம், ஆகிய இக்குணங்களே ஆன்ம சக்தியைப் பெறுவதற்குத் தக்க சாதனங்கள்.

ஆஸ்திக புத்தியும், நம்பிக்கையும், வைராக்கியமும் உள்ளவர்களுக்குத்தான் ஆன்மசக்தி யுண்டாகும்.

நெஞ்சிற் கருணை நிறைந்தவர்க்கு
நேயம்கொண்ட நெறியோர்க்கு
விஞ்சும் பொறுமை யுடையவர்க்கு
வெல்லும் படைகள் வேறுளதோ.

## 10. சமபாவம்.

உறவினர், வேறு மனிதர், சொந்தநாட்டினர், அந்நியர், வெள்ளைக்காரர், கருப்பு மனிதர், ஹிந்துக்கள், முஸ்லிம்கள்,

கிறிஸ்தவர்கள், பார்ஸிகள், தனவந்தர்கள், எளியவர்கள், பிற மதத்தினர் என்ற வேற்றுமை உணர்ச்சி அவர் எக்காலத்தும் பாராட்டியதே கிடையாது.

அஹிம்சை, பிரமசரியம் அபரிக்கிரகம் முதலிய மூல தர்மங்களைப் பின்பற்றுவதற்காக அவர் இடைவிடாது முயற்சிசெய்து வருகிறார். விஷ்ணு கோவிலுக்குப் போவதுபோல் சிவன் கோவிலுக்கும் போவதுண்டு.

லக்ஷ்மி என்ற ஒரு ஹரிஜனக் கன்னிகையை ஸ்வீகாரம் செய்துகொண்டு ஆசிரமத்தில் வைத்து அவளிடத்தில் அன்பும், இரக்கமும் காட்டிவந்தார். தனது கனிஷ்ட புத்திரன் தேவதாஸ் காந்திக்குக் கலப்பு மணம் செய்துவைத்தார். சர்ச்சுகளிலும், பள்ளிவாசல்களிலும் தொழுவார்.

தென்னாப்பிரிக்காவில் ஆதித்திராவிடர் ஒருவரை தன் குடும்பத்துடன் வைத்து சம்ரக்ஷித்துவந்தார். தன் பத்தினி அவன் சாப்பிடும் பாத்திரங்களை முழு மனதுடன் சுத்தம் செய்யவில்லை என்று சண்டை போட்டு வெளியே தள்ளினார்.

22 வயதுள்ள நீலாக்கிராம் கூக் என்ற அழகிய அமரிக்கன் மாது, மார்கரெட் ஸ்பீகால் ஜெர்மன் மாது இன்னும் பிராமணர் முதலியவர்களையும் தன் ஆசிரமத்தில் வைத்து சமமாக நடத்தி வருகிறார். மீராபாய் என்ற பாடலின் ஸ்லேட் என்ற ஆங்கில மாது அவருடன் கூடவே இருந்து அவருக்கு வேண்டிய சகல உணவுகளையும் செய்துவருகிறாள்.

ஆகவே அவருக்கு ஜாதி, மதம், தனவந்தர், எளியவர் என்ற வித்தியாசம் இல்லாத சமபாவமுடையவர். தான் ஆமதாபாத்தில் கைதியானபோது எல்வின் பாதிரியாருக்கு எழுதிக் கொடுத்த கடிதத்தினால் அவர் சமபாவம் நன்குவிளங்கும்.

எல்லாரும் ஒன்றென்னும் இயல்பை உணர்ந்தால் உலகம்
உல்லாசமாய்த் தேவயுகத்தினையே எய்துமடி.

## 11. உபவாசம்.

சிற்றின்பப் பற்றுள்ள மனம் எப்போதும் இனிப்பான பொருள்களையும், சுகபோகங்களையும் விழைகிறது. மனத்தின் இவ்வியல்பை அடக்க முயல்வோனுக்கு உணவுக் கட்டுப்பாடு

களும் உபவாசமும் அவசியமாகின்றன. கீழான மனம் புலன்களை அடக்கி ஆளுவதற்குப் பதிலாக அவற்றின் அடிமையாகி விடுகிறது. ஆதலின் மனத்தூய்மை பெறும் விருப்பமுள்ளோனுக்கு உடலைத் தூய்மையாய் வைத்திருப்பதும், கிளர்ச்சி தராத உணவுகளை அருந்துவதும், அடிக்கடி உபவாசம் இருப்பதும் உதவிபுரிகின்றன. எவருடைய உள்ளம் புலனடக்கத்தை நோக்கித் திரும்பியிருக்கிறதோ அவருக்கு உணவுக்கட்டுப்பாடுகளும் உபவாசமும் உதவியிருக்குமென்பதில் ஐயமில்லை. இது அநுபவத்தில் அவர் கண்டறிந்ததாகும். உண்மையில் அவற்றின் உதவியின்றி மனத்தின் காம இச்சையை வேருடன் களைதல் இயலாத காரியம். ஏகாதசி பிரதோஷ விரதங்களும் இருந்து வந்தார். விரத தினங்களில் தண்ணீரையன்றி வேறெதுவும் அருந்தாமல் சுத்த உபவாசம் இருக்கலானார். உபவாசத்தின் போது தண்ணீர் நிறைய அருந்தல் வேண்டும். டாக்டர் கூனின் முறைப்படி ஸ்நானம் செய்தலும் வேண்டும். புலன்களின் உணர்ச்சிகளை சாந்தப்படுத்துவதற்கு உபவாசம் முதலியவை இன்றியமையாதவை.

1914-௵ தென்னாப்பிரிக்காவில் வாலண்டியர் படைத் தலைமை அதிகாரியுடன் மனஸ்தாபப்பட்டு 14 நாள் உபவாசமிருந்தார்.

1914-௵ ஜோகான்ஸ்பர்க்கி லிருந்தபோது ஆச்ரம வாசிகளில் இருவர் ஒழுக்கம் தவறினரென்று கேள்வியுற்று அதற்குப் பிராயச்சித்தம் அவசியமெனக் கண்டு 7 நாள் உபவாசமும் நாலரை மாதம் தினம் ஒருவேளை ஆகாரம் உட்கொள்வதென்றும் விரதம் பூண்டார்.

1915-௵ ஆமதாபாத்தில் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்ய பிரதிக்ஞை செய்து பின் தவறியபடியால் உபவாசம் பூண்டார். மூன்று நாளில் உத்தேச பலன் கைகூடியபடியால் உபவாசத்தை நிறுத்தினர்.

1924-௵ செப்டம்பர்-௴ கோஹத்தி ஹிந்து முஸ்லீம் பிணக்குகளொழிய 21 நாள் உபவாச விரதமிருந்து வெற்றி பெற்றார். சௌரிசௌர சம்பவத்திற்கு 5 தினம் உபவாச மிருந்தார்.

1932-ஞ் செப்டம்பர்மீ 20உ பிரதம மந்திரியின் வகுப்பு வாரித்திட்டம் தாழ்த்தப்பட்டவர்களுக்கு விரோதமாயிருக்கிற தென்று உயிர்போகும் வரையில் உண்ணாவிரதம் ஆரம்பித்தார், இந்து தேச தலைவர்கள் வகுப்புவாரித் திட்டத்தை ரத்து செய்ததை தவிர பிரதம மந்திரியும் அதை ஒப்புக்கொண்டு விட்டபடியால் 26உ உபவாசம் நிறுத்தப்பட்டது. (7 நாள்)

1933-ஞ் மேமீ 18உ ஆத்ம பரிசுத்தத்திற்கும் ஊழியர்களிடை இருக்கும் தூய்மைக் குறைவிற்காகவும் 21 நாள் உபவாசமிருந்தார்.

1933-ஞ் ஆகஸ்ட்மீ 16உ தமக்கு ஜெயிலில் தீண்டாமை விலக்குக்காக வேண்டிய வசதிகள் சர்க்கார் அளிக்காததால் உபவாச விரதம் பூண்டார். ஆகஸ்ட்மீ 23உ விடுத்தனர். ஆக 81 நாள் உபவாசமிருந்திருக்கிறார்.

## 12. எளிய வாழ்க்கை.

அவர் முதலில் தொடங்கியது சுகவாழ்க்கை என்பது உண்மையே. நிரம்பக் கவலை யெடுத்து வீட்டுக்கு வேண்டிய அலங்கார சாமான்களைச் சேகரித்திருந்தார். ஆனால் அவ்வாழ்க்கையில் தனக்குப் பற்று உண்டாகவில்லை. ஆதலின் செலவைக் குறைக்கிறேன் என்று ஆரம்பித்தார். வண்ணான் கூலி நிரம்ப ஆகிக்கொண்டிருந்தபடியாலும், உடை சீக்கிரம் வராதபடியாலும் சலவைத்தொழிலைத் தானே தெரிந்துகொண்டு செய்துவந்தார்; க்ஷௌரமும் தானே செய்துகொள்வார்.

பென்ஸல் ஒரு அங்குலம் வரையில் உபயோகிப்பார். சிவும்போது யாராவது ஒடித்துவிட்டால் மிகக் கோபிப்பார். தவறிவிட்டால், அதை எடுத்து வைத்துவிட்டுத்தான் மறுவேலை பார்ப்பார். அலங்கார சாமான்களையெல்லாம் தொலைத்துத் தரையில் உட்கார்ந்துகொண்டார். சிறையில் சமையல் வேலையும் தானே செய்துகொண்டார்.

முதலில் மதுரைக்கு வந்திருந்தபோது இனி எளிய தமிழர்கள் உடையே தரிக்கிறதென்று பிரதிக்ஞை செய்து 45 இஞ்சு அகலமுள்ள கதர் வஸ்திரம் முழங்கால் வரையில் அரையிலும், அதே அளவுள்ள அங்கவஸ்திரமும் தரிக்கலானார்.

அவர் தோட்டி வேலை முதலியனவும் தானே செய்து கொள்ளுவார். காலில் அணிவது இயற்கையாய் இறந்த ஆட்டின் தோல் செருப்பு ஒரு கடியாரம் மட்டில் தேங்காநார் கயிற்றில் கோத்து இடுப்பில் போட்டிருக்கிறார். யாதொரு ஆபரணங்களுமில்லை.

## 13. ஆகாரம்.

பசுவின்பால், எருமைப்பால் காமத்தை உண்டாக்குமாத லால், வெள்ளாட்டின் பாலை அருந்தலானார். வெய்யிலினால் பக்குவமான பழங்கள், கொட்டைகள் இவையன்றி, திராக்ஷை, வாதாம் முதலிய கொட்டைகளிலிருந்து நரம்புகளுக்கு வேண்டிய போஷணைகளைப் பெறலாம். பச்சை மணிலாக்கொட்டை, வாழைப்பழம், பேரீச்சம்பழம், எலுமிச்சம்பழம், ஆரஞ்சுப் பழம், ஆலிவ் எண்ணை இவைகள் சாதாரண உணவுப்பொருள் கள். சூரியன் அஸ்தமித்தபின் உணவு அருந்துவதில்லை என்றும் விரதங்கொள்ளவும் தீர்மானித்தார்.

## 14 கைராட்டினம்.

1908ல் இந்திய சுயராஜ்ஜியம் என்னும் நூலில் வறுமைப் பிணிக்கு இராட்டினம் ஒன்றே மருந்து என்பதாக எழுதினார். அதுவரையில் கைராட்டினத்தையோ கைத்தறியையோ பார்த்த தில்லை. 1915ல் சபர்மதி ஆசிரமத்தில் சில கைத்தறிகளை அமைத்தார். 1917ல் கங்கா பென் மஜூம்தார் என்னும் பெண் மணியை புரோச்சில் கண்டுபிடித்தார். இராட்டினம் கிடைக் காததைப்பற்றி அவரிடம் முறையிட்டார். அவர் குஜராத் மாகாணம் முழுமையும் தேடிப்பரோடா ராஜ்யத்திலுள்ள பிஜப் பூரில் பரணிகளில் உபயோகமற்றுக் கிடந்த இராட்டினத்தைக் கண்டுபிடித்தார். அவ்வூரிலேயே நூற்கப்பட்ட நூலை நெய்ய நெசவுகாரர்களையும் கண்டுபிடித்தார். விரைவில் பிஜப்பூர் கதர் பெரும்புகழ் பெற்றது. ஆசிரமத்தில் முதன்முதலாக உற்பத்தி யான கதர் கெஜம் ஒன்றுக்கு 17 அணா விலை ஆயிற்று.

1915ம் ஆண்டில் தென்னாப்பிரிக்காவிலிருந்து இந்தியா திரும்பியபோதும் இராட்டினத்தைப் பாராதவராக இருந்தார். சபர்மதியில் சத்தியாக்கிரஹ ஆஸ்ரமம் 1915ல் ஸ்தாபிக்கப்

பட்டபோது சில கைத்தறிகளை அமைத்தார். தாங்களே கையால் துணி நெய்து அதையே அணியவேண்டுமென்பது அவர் இலட்சியமாகும். மகன்லால் காந்தி இராட்டையில் பல அபிவிருத்தி செய்துவந்தார். தானும் இராட்டினம் சுற்றக் கற்றுக்கொண்டார். இவ்வாறு நூற்கப்பட்ட நூலை பவித்திர ஏகாதசி தினத்தன்று சில வைஷ்ணவர்கள் சுவாமிக்கு மாலை போடுவதற்காக வாங்கிக்கொண்டார்கள்.

1. கைராட்டினத்தைக் கடைப்பிடிக்கும்படி இந்தியாவைத் தூண்டுவது எது? இந்திய ஏழை மக்களின் அகோரப்பசியே.

2. இந்தியரின் காமதேனு கைராட்டினமே. ராட்டினத்தை அஸ்திவாரமாகக் கொண்டே நம் ஏழைகளின் வாழ்வு அமைந்துள்ளது.

3. சர்க்காவுக்காகவே (இராட்டினம்) இந்திய ஜாதி உயிர் பெற்றிருக்கவேண்டும்; அதற்காகவே உயிர் விடவேண்டும்; அதன் மூலமாகவே பாமர மக்கள் வாழ்வின் ஒளியைப் பெறுகின்றனர்.

4. மங்கையர் கற்பைக் காப்பது ராட்டினமே; கணவரை இழந்த பெண்டிருக்கு உற்றதுணை ராட்டினமே; ஏழைகளின் வயிற்றைக் கஞ்சியால் நனைப்பதும் ராட்டினமே.

5. வீட்டிற்கு வீடு எப்படி வாசற்படியிருக்கின்றதோ அப்படியே வீட்டுக்கு வீடு ராட்டையுமிருத்தல்வேண்டும். முப்பத்தைந்து கோடி மக்களும் என்று கதர் தரிக்கின்றனரோ அன்றுதான் நாம் ஸ்வராஜ்ஜியத்தைக் காணமுடியும்.

## 15. தீண்டாமை.

மதத்தில் தீண்டாமைக்கு இடமில்லை; இது சாத்தானின் சேஷ்டையாகும். தீண்டாமையை அனுஷ்டிப்பது மனிதவர்க்கம் பூராவுக்குமே இழைக்கும் பெருந் தீங்காகவும், மற்றவர்களை விடத் தாம் மேம்பட்டவர்கள் என்ற அகம்பாவ உணர்ச்சி அதில் தலைகாட்டுகின்றது. ஹிந்து மதத்தைத் தீண்டாமை என்னும் மாசு பிடித்துக்கொண்டிருக்கிறது. ஹிந்து மதம் மிகவும் உன்னதமான மதம் என உலகினரால் வணங்கப்பட

வேண்டுமானால் இந்த மாசு நீக்கப்படவேண்டும். தெருவில் அலையும் நாயைவிடக் கேவலமாக ஒரு மனிதனை நடத்துவது தர்மமா? இந்தக்கொடிய வழக்கத்துக்குக் காரணமாகவுள்ள குருட்டு வைதீகத்தை நாம் தகர்த்தெறியவேண்டும். ஒரு தனி ஜாதியருக்கென ஒதுக்கிவைக்கப்படாத கோயில்கள், குளங்கள், கிணறுகள், பள்ளிக்கூடங்கள் முதலானவைகளில் பிராமணர் அல்லாதவர்களுக் கேற்பட்டிருக்கும் சலுகைகளனைத்தும் ஹரிஜனங்களுக்கு வழங்கப்படவேண்டும்.

அவர்களுக்குப் பாடுபடுகிறவர்கள் அடியில்கண்டவைகளைப் போதிக்கவேண்டும்:—

தங்கள் தேகங்களைச் சுத்தமாக வைத்துக்கொள்ளல், சுகாதார விதிகளை அனுஷ்டித்தல், தோட்டித்தொழில் தோல் பதனிடுதல் இவைகளைச் சுத்தமாகச் செய்தல், மாமிசம் கள்ளு சாராயங்களை நிறுத்துதல், பள்ளிக்கூடங்களுக்குப் பிள்ளைகளை அனுப்புதல், முதலியவைகளினால்தான் மத உரிமைகளை நிலை நாட்ட முடியும்.

ஜாதி ஜாதி யென்று நிதம்
சண்டைபோட்டு மண்டைகளை
மோதி மோதி யுடைப்பதொரு
மூடச்செயலென் றுணரீரோ.

## 16. தொழில்.

"நாட்டு மக்கள் நலமுற்று வாழவும்
நானிலத்தவர் மேனிலை எய்தவும்."

தன்னலம் கருதாது தேசத்தொண்டு செய்தல், ராட்டினம் சுற்றி நூல் நூற்றல், ஹரிஜனத்தொண்டு செய்தல், பாரிஸ்டர், எழுத்துக்கூலி வேலை, உபாத்தியாயர் வேலை, வைத்தியம், சமையல், காம்பவுண்டர் வேலை, க்ஷவரம், சலவை, கக்ஸ் சுத்தம் செய்தல், மரக்கலம் ஓட்டல், யுத்தத்தில் டோலி தூக்கல், வாலண்டியர் படையை நடத்திப் பிரதம சிகிச்சை செய்தல், தீண்டாமை விலக்கல், சத்தியாக்கிரஹம் செய்தல், காங்கிரஸ் பணி செய்தல், ஒத்துழைத்தல், ஒத்துழையாமை, சாஸ்திர ஆராய்ச்சி செய்தல், சிறைவாசம் செய்தல், பிரமசரியவிரதம் அனுஷ்டித்தல், உபவாசமிருத்தல் முதலியன.

## 17. சுயராஜ்ஜியம்.

சாவுக்கு அஞ்சும் தேசம் சுயராஜ்ஜியத்தைப்பெற முடியாது; அப்படி தப்பித்தவறி அடைந்தாலும் அதைப் பாதுகாத்துக்கொள்ள அதனுல் முடியாது. இந்திய மக்களில் ஐந்திலொரு பங்கினரை அடிமைக் குழியில் தள்ளிவைத்திருக்கும் வரையிலும் நாம் சுயராஜ்ஜியத்துக்கருகரல்ல. இந்தியாவில் பட்டினியில்லை என்ற நிலேயே சுயராஜ்ஜியம். இந்தியாவின் பொருளாதார வாழ்விற்கு அவசியமான கைத்தொழில்களே நாம் பாதுகாத்துக்கொள்ளும் உரிமை நமக்கிருப்பதே சுயராஜ்ஜியம். ஸ்வதந்தர புருஷர்களாகவும், ஸ்திரீகளாகவும் வாழ முடியவில்லே யென்ருல் நாமும் இறப்பதற்கு ஒருப்படல் வேண்டும். "நாமே நமக்குத் துணையானல் நாடும் பொருளும் நற்புகழும், தாமே நம்மைத் தேடிவரும் சற்று மிதற்கோரைய முண்டோ."

## 18. காங்கிரஸ்.

1901ம் ஆண்டில் அவ்வருஷத்திய காங்கிரஸ் மகாசபை கல்கத்தாவில் ஸ்ரீ டின்ஷா வாச்சாவின் அக்கிராசனத்தின் கீழ் கூடியது. அதற்கு காந்திஜீ போயிருந்தார். அவர் சென்றிருந்த முதலாவது காங்கிரஸ் இதுவேயாகும். காரியதரிசி கோஷாலிடம் குமாஸ்தாவாக இருந்து காங்கிரஸ் சம்பந்தமான வேலேகளேப் பார்த்தார். தென்னுப்பிரிக்கா இந்தியர்களின் பரிதாப நிலேயைப்பற்றி ஓர் தீர்மானம் அவரால் கொண்டுவரப்பட்டு ஸ்ரீ கோக்லேயால் ஆமோதிக்கப்பட்டு தீர்மானம் ஏகமனதாய் நிறைவேறியது.

1893ம் வருஷம் மேமீ 22உ நெட்டாலில் இந்தியக் காங்கிரசை ஸ்தாபித்தார்.

1919ம் வருஷம் பஞ்சாப் படுகொலே விஷயமாய் காங்கிரஸ் நியமித்த கமிட்டியில் பஞ்சாப் மாகாணத்தில் சுற்றுப்பிரயாணம் செய்து அறிக்கை தயார் செய்தார்.

1919-ஷ அமிர்தசரஸ் காங்கிரஸில் ஏற்பட்ட கூஷிப் பிளவைச் சமரசமாக முடித்து வைத்தார்.

1920-ஆம் கல்கத்தா காங்கிரஸில் ஒத்துழையாமைத் திட்டத்தை நிறைவேற்றி வைத்தார்.

1924-ஆம் பெல்காம் காங்கிரஸில் தலைமை வகித்தார்.

1924-ஆம் முதல் 1928-ஆம் வரையில் மாறுபட்ட அபிப்பிராயத்தால் ராஜீய் விஷயங்களைச் சுயராஜியக் கக்ஷிக்காரரிடம் ஒப்புவித்துக் கதர் விர்த்தி செய்வதில் காலம் கழித்தார்.

1927-ஆம் சென்னையில் நடைபெற்ற காங்கிரஸ் மகா சபைக்கு விஜயம் செய்திருந்தார்.

1928-ஆம் கல்கத்தா காங்கிரஸில் நேரு அறிக்கை சம்பந்தமாக எற்பட்ட பிளவைச் சமரசப்படுத்தினர்.

1929-ஆம் லாகூர் காங்கிரஸில் நேரு அறிக்கையை ஓராண்டுக்குள் அரசாங்கத்தார் அங்கீகரிக்காததால் பூரண சுயேச்சை தீர்மானத்தை அமுலுக்குக் கொண்டுவரவேண்டுமென்ற தீர்மானத்தை நிறைவேற்றிவைத்தார்.

1930-ஆம் பிப்ரவரி-மீ 15உ அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி காங்கிரசுக்கு அவரைச் சர்வாதிகாரியாக நியமித்தது.

1931-ஆம் செப்டம்பர்-மீ இரண்டாவது வட்டமேஜை மகாநாட்டிற்குக் காங்கிரசிற்கும் தேசத்தொண்டிற்கும் தனிப் பிரதிநிதியாக லண்டன்மாநகரம் சென்று நவம்பர்மீ 17உ காங்கிரஸ் அபிப்பிராயத்தைச் சபைமுன் தெரிவித்தார்.

1933-ஆம் காங்கிரஸ் மகாசபை நடக்கவில்லை.

1934-ஆம் காங்கிரஸ் மகாசபையைக் கலைத்தார்.

## 19. சாத்வீகச் சட்டமறுப்பு.

தர்மத்துக்கும் நியாயத்துக்கும் பிரஜைகளின் உரிமைகளுக்கும் விரோதமாக இருக்கும் சட்டங்களை எதிர்த்துப் போராடுவதே சட்டமறுப்பாகும்.

சாத்விகச் சட்டமறுப்பெனில், சட்டங்களே கிடையாதென்றோ, யார்வேண்டுமானாலும் எதை வேண்டுமாயினும் செய்யலாமென்றோ அர்த்தமல்ல; சட்டங்களுக்கு நன்கு கீழ்ப் படிந்து நடக்கத் தெரிந்தவனே சிறந்த சட்டமறுப்புக்காரன்.

சட்டமறுப்புச் செய்பவன் சட்டங்களை மீறி நடந்தால் தனக்கு இன்ன தண்டனை கிடைக்குமென்பதை உணர்ந்தே அங்ஙனம் செய்கின்றான்.

சாத்வீகச் சட்டமறுப்பு மிகவும் கடினமானது; இதற்கு மனவுறுதியும், தன் கொள்கைகளில் தேர்ந்த ஞானமும், சிறந்த தியாக புத்தியும், சகிப்புத் தன்மையும், அடக்கமும், மரியாதைக் குணமும் அவசியம். கோபமும் பகைமையும் மனதில் துவேஷமும் இதற்குப் பகைவர்கள்.

## 20. சத்தியாக்கிரஹம்.

### மகாத்மா காந்திஜீக்குச் சத்தியாக்கிரஹ உதயம்.

அவர் சிறுவயதில் பள்ளிக்கூடத்தில் குஜராத்தி பாஷையி லுள்ள ஒரு பாட்டைக் கற்றுக்கொண்டார் அது அவருக்கு மிகவும் பிடித்திருந்தது. அந்தப்பாட்டு அவரை விடவேயில்லை. அதனுடைய சாராம்சம் வருமாறு:—

ஒருமனிதன் அருந்துவதற்காக உனக்கு தண்ணீர் கொடுத்தால் அதற்குப் பதிலாக நீயும் அருந்துவதற்குத் தண்ணீர் கொடுப்பாய். இதில் ஒன்றும் விசேஷமில்லை. கொடுமைக்குப் பதிலாக நன்மையைச் செய்வதில்தான் ஆனந்தமிருக்கிறது என்னும் இந்தப் பாட்டைக் கற்றுக்கொண்டார். இந்தப்பாட்டு அவரை ஆதிக்கப்படுத்திக்கொண்டது.

டிரான்ஸ்வாலில் குடியிருக்கும் ஒவ்வொரு இந்திய மனித னும், ஸ்திரீயும், எட்டு வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளும் ஆசியா வாசிகளின் ரிஜிஸ்டாரிடத்தில் ரிஜிஸ்திரேஷன் சர்டிபி கேட் பெறவேண்டும். அதில் பெயர், விலாசம், ஜாதி, வயது முதலிய விவரங்களைக் குறிக்கவேண்டும். கைவிரல் ரேகைகளை யும் பதிக்கவேண்டும். ஸ்திரீகள் உள்பட தங்களுடைய உடம்பி லுள்ள அடையாளங்களை அவர்களுக்குக் காட்டவேண்டும். அவ் விவரம் அடங்கிய சர்ட்டிபிகேட்டை ஒவ்வொருவரும் வாங்கி, தாம் போகுமிடங்களுக் கெல்லாம் கொண்டுபோய், போலீஸ் முதலிய சகல அதிகாரிகளும் கேட்கும் காலங்களிலெல்லாம் காட்டவேண்டும். அப்படிச் செய்யத் தவறுகிறவர்கள் தண்டிக் கப்படுவார்கள். போலீசார் வீடுகளுக்குள்ளும் புகுந்து பரி சோதனை செய்வதற்கும் உட்படவேண்டும். இவ் வெட்கக்

கேடான சட்டத்துக்குக் கீழ்ப்படிவது மிக அவமானமாகக் கருதி ஏழை பங்காளராகிய மகாத்மா காந்திஜீ 1906-ஆம் செப்டம்பர்-மீ 11உ தென்னாப்பிரிக்காவிலுள்ள டிரான்ஸ்வால் நாட்டில் எம்பயர்க் கொட்டகையில் ஒரு பொதுஜனக்கூட்டம் கூட்டினார். இம்மாதிரி சட்டம் சுதந்திர மனிதர்களுக்கு விரோதமாக உலகில் எந்தப் பாகத்திலும் செய்யப்பட்டிருப்பதாகக் கேட்டதில்லை என்று அவசரச்சட்டத்தை ஒவ்வொரு வார்த்தையாக எடுத்துரைத்து, இது நம்மை இந்த நாட்டிலிருந்து துறத்துவதற்காகச் செய்யப்பட்ட முதல் சூழ்ச்சியாகும்; நம் தாய்நாட்டையும் அவமானப்படுத்தியதாகும். ஆகையால் நாம் யாவரும் சாந்தமாகச் சத்தியாக்கிரகம் செய்யவேண்டுமென்று யாவர் மனமும் உருக எடுத்துரைத்தார். யாவரும் அதற்கு இசைந்து அப்படியே செய்வதாகப் பிரதிக்ஞை செய்தார்கள்.

சத்தியாக்கிரகம் (சத் = உண்மை; ஆக்கிரஹம் = உறுதி) என்னும் வார்த்தையை சிருஷ்டித்துச் சத்தியாக்கிரகம் செய்ய ஆரம்பித்தார். சத்தியாக்கிரகம் என்பதன் அடிப்படையான அர்த்தம சத்தியத்தை அழுத்தமாகப் பற்றி நிற்றல்; அதாவது சத்திய சக்தி. இதை அன்பின் சக்தி அல்லது ஆத்ம சக்தி எனவும் அவர் அழைக்கிறார். அஹிம்சை இல்லாத சத்தியாக்கிரகம் மாலுமியில்லாதக் கப்பலேயாக்கும். பிறர்க்கு எவ்விதத்திலும் துன்பமிழைக்காமல், நம்மை நாம் கஷ்டப்படுத்திக் கொண்டு பிறரை மாற்றுவதே சத்தியாக்கிரகம். அஹிம்சையுடன் கூடிய சத்தியத்தால் ஒருவர் உலகத்தையே தன் காலடிக்குக் கீழ்க் கொண்டுவரலாம். எவ்வளவு கஷ்டங்கள் நம்மைச் சூழ்ந்துகொண்ட போதிலும் நாம் சத்திய விளக்கின் துணையைக் கைவிடக்கூடாது. சர்க்காரின் மிருகசக்தி தாண்டவமாடினும் சரி, அல்லது சமூகத்தின் பிடிவாதம் தலைவிரித்தாடினும் சரி நாம் அவற்றைச் சத்தியாக்கிரகம் மூலமாகவே எதிர்த்துப் போராடவேண்டும்.

சத்தியாக்கிரகத்தின் அழகும், பலனும் அபாரமானதாலும், அதன் தத்துவம் மிகவும் சாமானியமானதாலும், அதைக் குழந்தைகள்கூட அனுஷ்டிக்கலாம். சரியான சத்தியாக்கிரகி ஒருவனிருந்தாலும், சத்தியாக்கிரகப் போர் வெற்றியில் முடியும்.

**சத்தியாக்கிரகம் என்பது தனத்தூய ஆத்மசக்தி.**

சத்தியம் என்னும் வார்த்தையில், அன்பு என்னும் பொருள் மறைந்து நிற்கிறது. 'அக்கிரஹம்' என்றால் உறுதி. உறுதி சக்தியை யுண்டாக்குவதால், சக்தி என்ற அர்த்தத்துடன் விளங்குகிறது. இவ்விதம் இந்த இயக்கத்தை 'சத்தியாக்கிரகம்' என்று கூற ஆரம்பித்தார். அதாவது உண்மையிலிருந்தும் சத்தியத்திலிருந்தும் அல்லது அஹிம்சையிலிருந்தும் பிறந்த சக்தி என்பது அதன் பொருள். 'சாத்வீக எதிர்ப்பு' என்னும் சொற்றொடர்ப் பிரயோகத்தை அதிலிருந்து விட்டு விட்டேன் என்றார். இரண்டிற்கும் வித்தியாசம் மிக உள. பன்முறை சத்தியாக்கிரகம் செய்து வெற்றிமாலை சூடியிருக்கிறார். 1915-ஹு மே-மீ 25உ ஆமதாபாத்தில் சத்தியாக்கிரக ஆஸ்ரமம் ஸ்தாபனம் செய்தார்.

## 21. ஒத்துழைத்தல்.

**மகாத்மா ஏகாதிபத்தியத்துடன் ஒத்துழைத்தல்.**

1922-ஹு மார்ச்சு-மீ 18உ ஆமதாபாத் டிஸ்டிரிக்ட் மாஜிஸ்திரேட்டிடம் மகாத்மாகாந்தி எழுத்து மூலமாகக் கொடுத்த வாக்குமூலம்:—

1899-ஹு போயர் யுத்தத்தில் ஏகாதிபத்தியத்தின் நிலைமைக்கே அபாயம் வந்தபோது, நான் உதவி செய்வதாக முன் வந்து சிகிச்சா தொண்டர்படை யொன்றைத் திரட்டி லேடிஸ்மித் என்னுமிடத்தை ஸ்வாதீனப்படுத்திக்கொள்ள உண்டான முற்றுகைச் சண்டையில் ஊழியஞ் செய்தேன்.

1906ம் வருஷத்திலும் 'ஜுலு புரட்சி' ஏற்பட்டபோதும் காயமடைந்தவர்களுக்கு உதவி செய்யத் தோலிகை எடுக்கும் ஒரு படையைத்திரட்டி உதவி செய்துவந்தேன். இந்த இரண்டு சந்தர்ப்பங்களிலும் எனக்கு பதக்கங்கள் கொடுக்கப்பட்டன. கெவர்ன்மெண்டார் வெளியிட்ட அறிக்கைகளிலும் என்னைப் பற்றிய பிரஸ்தாபமிருந்தது. தென்னாப்பிரிக்காவில் நான் செய்த வேலைக்காக லார்டு ஹார்டிஞ்சு கெய்ஸர் ஹிண்டு பதக்கமொன்றையும் எனக்குக் கொடுத்தார்.

1914-ஆம் இங்கிலாந்துக்கும் ஜெர்மனிக்கும் யுத்தம் ஏற்பட்டபோது லண்டன்மாநகரில் இருந்த இந்தியர்களையும் முக்கியமாய் மாணவர்களையும் கொண்டு சிகிச்சைப் படையைத் திரட்டி ஊழியம் செய்தேன். இந்தப்படை சிறந்த வேலை செய்ததாக அதிகாரிகளாலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது.

1917-ஆம் டில்லிமா நகரில் கூடிய யுத்த மகாநாட்டில் லார்டு செம்ஸ் போர்டு யுத்தத்திற்கு ஆட்கள் வேண்டுமெனப் பிரத்தியேகமாகக் கேட்டபோது, தேக அசௌக்கியத்தையும் பாராது இந்தியாவினின்றும் ஒரு படையைத் திரட்டி அனுப்பினேன். மாண்டேகு சேம்ஸ் போர்ட் சீர்திருத்தச் சட்டத்தை ஏற்று வேலையிலிறங்கவேண்டுமென்றும் அதை எதிர்த்த என் சகோதரர்களுடன் போராடினேன்.

## 22. ஒத்துழையாமை.

அரசாங்கத்துக்கு இத்தகைய ஊழியம் செய்வதால் என் நாட்டினருக்குப் பூரண சமத்துவம் கிடைக்குமென்றே நம்பி இவ்வளவு முயற்சியும் எடுத்துக்கொண்டேன். ஆனால் முதலில் இடித்த இடி, ஜனங்களின் உண்மையான சுதந்தரத்தைப் பறிக்கவல்ல ரௌலட் சட்டம் என்ற உருவத்தோடு வந்தது. அதன்பின் பஞ்சாப் கொடுமை நிகழ்ந்தது. அது ஜாலியன் வாலா படுகொலையில் ஆரம்பமாகி மார்பால் ஊர்ந்துபோதல், சவுக்கடி முதலிய சொல்லவொண்ணாத இழிவான உத்திரவுகளில் முடிந்தது. ஆனால் அந்த நம்பிக்கை யெல்லாம் சிதறுண்டு போயிற்று. பஞ்சாப் குற்றங்கள் மழுப்பிவிடப்பட்டன. பஞ்சாப் சம்பவ சம்பந்தமாகக் குற்றஞ் செய்தவர்களில் பலர் தண்டிக்கப்படாமல் இன்றும் வேலையிலேயே வைக்கப்பட்டும், சிலர் இந்தியாவின் வருமானத்தினின்றும் உபகாரச்சம்பளம் பெற்றும், இன்னும் சிலருக்கு வெகுமானமும் அளிக்கப்பட்டும் வரலாயின.

சீர்திருத்தச் சட்டத்தால் அதிகாரிகளின் மனப்பான்மை மாறுபடாததோடு இந்தியாவின் வருமானத்தை வற்ற அடிப்பதற்கும் அடிமைத்தனத்தை இன்னும் நீடிக்கச் செய்வதற்கும் இச்சீர்திருத்தங்கள் ஒருவழியாகவுமிருக்கிறதென்பதை அவர்

அறிந்துகொண்டார். கடைசியில் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாரின் சம்பந்தத்தால் இந்திய ராஜிய விஷயத்திலும் பொருளாதார நிலைமையிலும் முன்னைவிடக் கேவலமாகிவிட்ட தென்ற வெறுப்புடன் அவர் வந்துவிட்டார்.

1919ம் வருஷம் வரையில் அவர் கவர்ன்மெண்டாருடன் ஒத்துழைப்பவராகவே இருந்தார். ஆனால் கவர்ன்மெண்டார் செய்த அக்கிரமங்களும் குற்றங்களும் வரம்பின்றிப் போய்விட்டபடியால் ஒத்துழையாமை இயக்கத்தை ஆரம்பித்தார்.

எவை எவை தீமையென நமக்குப் படுகிறதோ அவற்றுடன் ஒத்துழைக்க மறுப்பதே ஒத்துழையாமை. தற்போதுள்ள ஆக்ஷிமுறையினால் நமக்குத் தீமையே நேரிடுகின்றதாகையால் அதனுடன் ஒத்துழைக்க நாம் மறுத்துவருகிறோம்.

ஒத்துழையாமையெனில் அராஜகம் என்பதல்ல; ஏனெனில் எப்பொழுது சர்க்காருடன் ஒத்துழைக்கவில்லையோ அப்பொழுது ஜனங்கள் தங்களுக்குள் அதிகமாக ஒற்றுமைப்படுகின்றனர். ஆகவே ஒத்துழையாமையென்பது ஐக்கிய பாவத்தை அதிகமாக்கும் தத்துவமேயாகும்.

ஒரு தந்தை அநீதி யிழைப்பானாகில் அவனது வீட்டைவிட்டு வெளியே செல்லவேண்டியதே மகன் கடமை. அங்ஙனமே ஒரு கவர்ன்மெண்டு அநியாயம் புரியுமாகில் அதனுடன் நாம் ஒத்துழைப்பதை நிறுத்திக்கொள்ள வேண்டும்.

ஒத்துழையா இயக்கம் 1920௵ ஆகஸ்ட்௴ முதல் தேதி ஆரம்பம். ஒத்துழையாமை திறமையாக நடக்கவேண்டுமாயின், பூரணமான ஒழுங்கும், ஏற்பாடும், அமைதியும் வேண்டும். கோபம் தலைகாட்டினால்தான் அதிலிருந்து ஒழுங்கீனம் உதிக்கும். மூர்க்கம் என்பது சிறிதுகூட இருக்கக்கூடாது. மூர்க்கம் தலைகாட்டினால், நமது முன்னேற்றம் தடைப்படும்; தவிர நிரபராதிகளான பலர் வீணே உயிர் இழக்க நேரும் என்றார்.

ஒத்துழையாமைக்கு மகாத்மா காந்தியும் அதற்கென ஏற்பட்ட பஞ்சாயித்தாரும் ஏற்படுத்திய திட்ட விபரம்:—

1. கவர்ன்மெண்டால் கொடுக்கப்பட்ட பட்டங்களையும், பதவிகளையும், விருதுகளையும் விட்டுவிடவேண்டும்.

2. கவர்ன்மெண்டார் கடன் வாங்குவதில் யாரும் உதவி செய்யக்கூடாது-

3. வக்கில்கள் தமது தொழிலை விட்டுவிடவேண்டும். தாவாக்களை மத்தியஸ்தர்களின் மூலம் தீர்த்துக்கொள்ள வேண்டும்.

4. கவர்ன்மெண்டின் கல்விச்சாலைகளுக்குப் பிள்ளைகளை அனுப்பக்கூடாது.

5. சீர்திருத்த சட்டசபைகளுக்கு யாரும் போகக்கூடாது.

6. கவர்ன்மெண்டார் நடத்தும் விருந்துக் கச்சேரிகளுக்கும் பிற காரியங்களுக்கும் போகக்கூடாது.

7. கவர்ன்மெண்டிலே எவ்வித உத்தியோகமும் வகிக்கக் கூடாது.

8. சுதேசியைப் பரப்பவேண்டும்.

9. அன்னியதேச ஆடைகளை பகிஷ்கரித்தல்.

10. நூல் நூற்கும் தொழிலைப் பரப்பல்.

11. சொந்த தேசத்தில் தயாராகும் ஆடைகளை தரிப்பதென்று சபதம் செய்துகொள்ளல்.

ஹிந்துக்களின் வேதநூல்களிலும், குரானிலும், பைப்பிளிலும் மூர்க்கச்செயலில் இறங்க விதியில்லை. மூர்க்கச்செயலை கையாளலாமென்பதாக ஒரு மதமும் போதிக்காது. போதிக்கவுமில்லை. சிருஷ்டிக்கும்படியான சக்தி மனிதனுக்கு கிடையாது. அப்படியிருக்கையில், சிருஷ்டியை அழிக்கும் உரிமை அவனுக்கு எப்படி உண்டு.

1920-ஹு செப்டம்பர்-மீ கல்கத்தாவில் நடைபெற்ற விசேஷ காங்கிரஸில் ஒத்துழையாமைத் திட்டத்தை நிறைவேற்றிவைத்தார்.

1919-ஹு தேசியக்கிளர்ச்சியை அடியோடு அடக்க கவர்மெண்டார் ரௌலட் சட்டத்தை சிருஷ்டித்தார்கள். காந்திஜீ இந்தக் கொடிய சட்டத்துக்கு இந்திய மக்கள் பணியக்கூடாதென்று தீர்மானம் செய்தார். ஏப்ரல்மீ 6உ இந்தப்போர் தொடங்குவதென்றும், அன்றைய தினத்தை தேசமெங்கும் சத்தியாக்கிரக தினமாகக் கொண்டாட வேண்டும் என்றும் கட்டளையிட்டார்.

4

171602

அவ்வாறே பாரதநாட்டிலே இமசேது பரியந்தம் எண்ணி லடங்காத நகரங்களிலும் கிராமங்களிலும் வேலை நிறுத்தம் நிகழ்ந்தது. ஜனங்கள் கடைகளை யடைத்து உபவாசமிருந்து கடவுளைத் தொழுதார்கள். தேசமெங்கும் அமைதியாக நடை பெற்றது. இதுவே இவர் செய்த முதற்காரியம். அமிர்தசரஸ் நகரிலே சிறு கலகம் நடந்தது. ஜெனரல்டயர் தமது படையுடன் அவ்விடம் வந்து கூட்டமே கூட்டக்கூடாதென முந்திய இரவில் கட்டளையிட்டிருந்தாராம். அது ஜனங்கள் யாருக்கும் தெரியாது. எப்ரல்மீ 13உ விசேஷ ஹிந்து திருநாளுக்கு ஜாலியன் வாலாபாக் என்னுமிடத்திலே ஜனங்கள் கூடியிருந்தார்கள். அதில் பெண்களும், குழந்தைகளும் அதிகம். அவர்கள் சாந்தமாகவே யிருந்தார்கள். ஜெனரல்டயர் மெஷின் பீரங்கிகளுடன் அவ்விடம் வந்து எச்சரிக்கையும் செய்யாமல் நிராயுதபாணிகளான ஜனங்களை சுடும்படி கட்டளையிட்டார். தோட்டாக்கள் தீரும் வரையில் துப்பாக்கிப்பிரயோகம் நடந்தது. அந்த இடத்தைச்சுற்றி பெரிய மதிலிருந்தபடியால் ஜனங்கள் ஓடமுடியவில்லை. ஐந்நூறு அல்லது அறுநூறு ஹிந்துக்கள் கொல்லப்பட்டார்கள். காயமடைந்தவர்களோ இன்னும் அதிகம்.

எங்கும் ராணுவச் சட்டம் அமுலுக்கு வந்தது. நிராயுத பாணிகளான ஜனங்களின் மீது ஆகாய விமானங்கள் குண்டுகளை வருஷித்தன. மிகவும் மதிப்பு வாய்ந்த கனவான்கள் ராணுவக் கோர்ட்டுகள் முன் கொண்டுவந்து நிறுத்தப்பட்டனர்; சவுக்கால் அடிக்கப்பட்டனர்; வயிற்றால் நகர்ந்து செல்லும் படி கட்டாயப்படுத்தப்பட்டனர். இன்னும் மிக்க மானக்கேடுகளுக்கு ஆளாக்கப்பட்டனர், குற்றம் செய்த டயருக்கும் வெகுமதி அளிக்கப்பட்டது. எப்ரல்மீ 18உ தேசத்தில் அஹிம்சை ஏற்பட்டபடியால் சத்தியாக்கிரகத்தை நிறுத்தினர்.

1921-ஷ காந்தியின் காரியங்கள் உச்சஸ்தானம் அடைந்திருந்தன. கடவுளைப்போல அவரை எல்லாரும் கும்பிட்டு வணங்கினர். அவ்வாண்டிலே தேசத்தில் சுதந்திராதேவி ஆனந்தத நர்த்தனம் செய்தாள். ஒரு நூற்றாண்டுக்கு மேலாக கிடந்த ஜனங்கள் முன்னெப்போதும் இல்லாதவண்ணம் கண் விழித்தெழுந்து சுயராஜ்ஜியக் கிளர்ச்சியில் ஈடுபட்டார்கள். தியாகமூர்த்தியான மகாத்மா தொடங்கிய இயக்கத்திலே தியா

கமே தலை சிறந்து விளங்குமன்றோ. நூற்றுக்கணக்கான மாணுக்கர்கள் பாடசாலை பரிஷ்காரம் செய்தார்கள். லக்ஷக்கணக்கான பாமர ஜனங்கள் காங்கிரஸ் அங்கத்தினராயினர். வாக்காளர்களில் பெரும்பாலோர் சட்டசபைகளை பரிஷ்கரித்தனர். சுயராஜ்ஜிய நிதிக்கு ஒரு கோடி ரூபாய் வசூலாயிற்று. வருஷக் கடைசியிலும் 1922ம் வருஷத்திலும் சுமார் 30000 இந்திய மக்கள் தங்கள் தேச காரணமாகச் சிறை புகுந்தார்கள். ஆமதாபாத்தில் காங்கிரஸ் மகாசபை கூடி இந்திய ராஜீய இயக்கத்துக்கு காந்திஜீயே சர்வாதிகாரி யென்றும் அவருடைய சொற்படியே யாவரும் நடக்கவேண்டு மென்றும் ஓர் தீர்மானமும் பாசானது. அக்காலத்தில் 25 ஆயிரம் ஸ்திரீ புருஷர்கள் வரையில் சிறைபட்டார்கள்.

1930-ஞு மார்ச்சு-மீ உப்பு வரி முதலிய 11 விதிகளை விதித்து 80 தொண்டர்களுடன் உப்புச்சத்தியாக்கிரகம் செய்ய டாண்டிக்குப்போய் ஏப்பிரல்மீ 6வ உப்பு சட்டத்தை மீறி உப்பைக் காய்ச்சினுர். மேமீ 5வ கைது செய்து அரசாங்க கைதியாக வைத்தனர்.

1933-ஞு ஆகஸ்ட்டு-மீ 1வ ஸ்திரீ புருஷ தொண்டர்களுடன் தனி சட்டமறுப்புச் செய்ய ராஸ் யாத்திரைக்குப் புறப்பட ஏற்பாடு செய்திருந்தார். அன்று இரவே காந்திஜீயும் மற்றவர்களும் கைது செய்யப்பட்டு ராஜாங்க கைதியாக வைக்கப்பட்டனர்.

நெருங்கிய பயன்சேர் "ஒத்துழையாமை"
நெறியினல் இந்தியாவிற்கு
வருங்கதி கண்டு பகைத்தொழில் மறந்து
வையகம் வாழ்க நல்லறத்தே! (பாரதி)

## 23. அவமானமும் கஷ்டமும்.

பாரிஸ்டருக்கு படிக்க லண்டன் சென்றபோது சுயஜாதியாரால் ஜாதிப்பிரஷ்டம் செய்யப்பட்டார். கத்தியவார் சமஸ்தான பொலிடிகல் ஏஜண்டைப் பார்க்கபோனபோது சேவகனல் தள்ளப்பட்டார். முதல் வகுப்பு சீட்டு வாங்கி ரயிலில் போகும்போது போலீசார் அவரை வெளியில் இழுத்து தள்ளி

சாமான்களை வெளியிலெறிந்தார்கள். குதிரை வண்டியில் போகையில் காதுகளில் ஓங்கி அறையப்பட்டும் படியில் உட்காரும்படி அவமானப் படுத்தப்பட்டார். தென்னாப்பிரிக்க ரோட்டிகளிலும் மற்ற இடங்களிலும் கடும் வெயிலில் கப்பிக்கல் உடைத்தும், கக்ஸ்கள் சுத்தம் செய்தும் பலவேலைகள் செய்து வந்தார். ஜெயிலுடை தரித்து கை விலங்கு பூண்டு மூட்டைகளையும் சுமந்து கொண்டு கொட்டுகிற மழையில் ரோட்டு வழியாக சென்றார். முன் பல் உடைபட்டும் பன்முறை சிறைக் கோட்டம் புகுந்தும், பலநாள் உபவாசமுமிருந்தார். இன்னும் பல கஷ்டங்களையும் அவமானங்களையும் மனம் சலியாது சந்தோஷத்துடன் ஏற்று அநுபவித்தார்.

ஞானிக்கில்லை இன்பமும் துன்பமும்.

## 24. சிறைவாசம்.

1. தென்னாப்பிரிக்காவில் டிரான்ஸ்வால் நாட்டை விட்டு ரிஜிஸ்திரேஷன் சர்டிபிகேட் பெருதவர்கள் வெளியேறிப்போக வேண்டுமென்று அக்கவர்ன்மெண்டாரால் உத்திரவு செய்யப்பட்டிருந்தது. அவ்வுத்திரவை மகாத்மாகாந்தியும் இன்னும் பலரும் மீறினர்கள். அக்குற்றத்திற்கு 1908-ஸு ஜனவரி-மீ 10உ இரண்டு மாதம் வெறுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டு ஜோகன்ஸ் பர்க்கு சிறையிலிருந்தார். சமாதானத்தின்பேரில் 1908ஸு ஜனவரிமீ 30உ விடுதலை யடைந்தார்.

2. 1908ஸு அக்டோபர்மீ 7உ தர்பானிலிருந்து திரும்பும் போது, கவர்ன்மெண்டார் உத்திரவுப்படி அவரிடம் வாலண்டரி சர்டிபிகேட் இல்லாதபடியாலும் கைரேகை அடையாளம் கொடுக்க மறுத்தபடியாலும், வால்கஸ்ரஸ்ட் ஸ்டேஷனில் கைது செய்து 1908ஸு அக்டோபர்மீ 25 பவுன் அபராதம் விதித்து அதைச் செலுத்த தவறினல் இரண்டுமாதம் கடுங்காவல் தண்டனை விதித்தார்கள். அபராதம் செலுத்த மறுத்து ஜோகன்ஸ்பர்க்கு சிறையிலிருந்தார்.

3. 1909ஸு பிப்ரவரிமீ 25உ மூன்று மாதம் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டு பிரிடோரியா சிறையிலிருந்தார்.

4. இந்தியாவில் கவர்ன்மெண்டுமீது அப்பிரியம், விரோத மும் உண்டாகும் வண்ணம் பிரசங்கம் செய்ததாக 1922ஹு மார்ச்சுமீ 10உ ஆமதாபாத்தில் சபர்மதி ஆஸ்ரமத்தில் கைதி செய்யப்பட்டு, 23உ ஆமதாபாத் ஜில்லா ஜட்ஜி புரூம்பீல்டு ஒவ்வொரு குற்றத்திற்கும் இரண்டு வருஷம் வீதம் ஆறு வருஷம் தண்டனை விதிக்கப்பட்டு எரவாடா சிறையிலிருந்தார்.

1924ஹு ஜனவரிமீ 13உ குடலில் ஏற்பட்ட வியாதி காரணமாக 1924ஹு பிப்ரவரிமீ 5உ விடுதலைசெய்யப்பட்டார்.

5. 1930ஹு மேமீ 5உ டாண்டியில் உப்புச்சட்டத்தை மீறி உப்பைக் காய்ச்சியதற்காக கைதி செய்து (விசாரணை நடத்தாமல்) 1827ஹு 25வது ரெகுலேஷன்படி இஷ்டப்படும் வரையில் சிறையிலிருக்கவேண்டுமென்று எரவாடாச் சிறையில் வைத்தார்கள். 1931ஹு ஜனவரிமீ 25உ சமாதானத்தின் பேரில் விடுதலை செய்யப்பட்டார்.

6. இரண்டாவது வட்டமேஜை மகாநாட்டுக்கு லண்டன் சென்று திரும்பியபோது கப்பலிலேயே 1932ஹு ஜனவரிமீ 4உ கைதி செய்யப்பட்டு ராஜாங்கக் கைதியாக எரவாடா ஜெயிலில் வைத்தார்கள். பிரதம மந்திரியின் வகுப்புவாரித் திட்டம் தாழ்ந்தவர்களை பிரித்துவைக்குமென்றும் அது அபாயமென்றும் ஜீவன் பிரிகிறவரையில் உண்ணாவிரதம் இருக்கிறதென்றும் 1932ஹு செப்டம்பர்மீ 20உ விரதம் ஆரம்பித்தார். எல்லாத் தலைவர்களும் சந்தித்து ராஜியாகப் பேசி தனித்தொகுதியை ரத்து செய்யத் தீர்மானித்து அரசாங்கத்தாருக்கு அறிவித்தார்கள். அவர்களும் அதை ஏற்று 1933ஹு மேமீ 18உ விடுதலை செய்தார்கள்.

1933ஹு ஜூலைமீ 30உ மகாத்மாஜி பம்பாய் சர்க்காருக்கு கீழேகண்ட விஷயங்களுக்கு இறுதியாக கடிதம் எழுதினர். 1—8—33ல் சபர்மதி ஆசிரமத்தைக் காலிசெய்துவிட்டு ராஸ் கிராமத்துக்குத் தானும் தோழர்களும், 16 ஸ்திரீகள் குழந்தைகள் உள்பட 33 பேர் யாத்திரை செய்யப் போவதாகவும், அந்தக்கிராமத்தார்தான் அதிகத் துன்பம் அடைந்தார்

கள் என்றும் தனி சட்டமறுப்புச் செய்ய அழைக்கப்போவதாகவும், குடியை அறவே ஒழியுங்கள், கதராடை உடுத்துங்கள் தீண்டாமையை உதரித் தள்ளுங்கள் என்று சொல்லப்போகிறோம்; கையில் தம்படியின்றி எங்கள் உணவுக்கு கிராமவாசிகளையே நம்பிப்போகிறோம் என்றும் எழுதினார்.

7. 1933௵ ஆகஸ்ட்டுமீ 1௳ இரவு 1-40 மணிக்கு சேத்ரஞ்சோடிதாஸ் பங்கிளாவுக்குள் மகாத்மாஜீ, கஸ்தூரிபாய், மகாதேவ தேசாய் ஆகியவர் படுத்துறங்கிக்கொண்டிருந்த இடத்திற்கு போலீஸ் படை புடைசூழ நாலு மோட்டார்களில் ஜில்லா மாஜிஸ்திரேட்டும் ஜில்லா போலீஸ் சூப்பரெண்டும் வந்து சேர்ந்தனர். மகாத்மாஜீயும் பிறரும் விழித்தெழுந்தனர் ஐயனுக்கு மிகப்பிரியமான "வைஷ்ணவ ஜனதோ" என்ற கீதத்துடன் பிரார்த்தனை நடந்தது. பிரார்த்தனை முடிந்ததும், ஓர் குங்குமதிலகம் நெற்றியில் துலங்க ஐயன் கீழே இரங்கிவந்தார். உடன் 33 ஆஸ்ரமவாசிகளும் பம்பாய் அவசரச்சட்டம் 3வது பிரிவின்கீழ் கைதி செய்யப்பட்டு சபர்மதி சிறையில் கொண்டு சேர்க்கப்பட்டார்கள்.

எரவாடா எல்லையை விட்டு போகும்படி உத்திரவிட்டு விடுதலை செய்தார்கள். அதற்கு மறுக்கவே சிறையில் விசாரித்து ஒருவருஷம் வெறுங்காவல் தண்டனை விதித்து எரவாடாவில் எ வகுப்பில் வைத்தார்கள். 1933௵ ஆகஸ்ட்டு 16௳ பகல் 12 மணிக்கு தமக்கு ஹரிஜன சேவைக்கு வேண்டிய வசதிகள் சர்க்கார் அளிக்காததால், 22 நாள் அவர் நீடித்தகால உபவாசத்தை ஆரம்பித்தார். 23௳ நிபந்தனையன்னியில் விடுதலை செய்யப்பட்டார்.

முதல்தடவை 20 நாளும், 2வது தடவை இரண்டு மாதமும், 3வது தடவை மூன்று மாதமும், 4° தடவை ஒரு வருஷம் 10மீ 3 நாளும், 5வது தடவை எட்டு மாதமும் 25 நாளும்; 6வது ஒரு வருஷம் 4 மாதம் 14 நாளும், 7வது தடவை 22 நாளும், ஆக (3—3—1933) வரையில் 4 வருஷம், 5 மாதம், 24 நாள் நாட்டு மக்கள் நலமுற்று வாழவும், நானிலத்தவர் மேனிலையெய்தவும் காராக்கிரகத்தில் கடுந்தவம் புரிந்தார்.

## 25. மலர்மாலை

சபர்மதி ஆஸ்ரமம் பம்பாய் இராஜதானி குஜராத்ராஜ்யத்தில் ஆமதாபாத் ஜில்லா ஆமதாபாத் தாலுக்கா ஆமதாபாத் ரயில்வேஸ்டேஷனுக்கு நாலுமைலில் சபர்மதி ரயில்வேஸ்டேஷனருகில் சபர்மதி என்ற கிராமத்தில் சபர்மதிக்கரையில் பம்பாய் சூரட், பரோடா ஆமடாபாட்டுக்கு வடக்கில் பம்பாயிலிருந்து 310வது மைலிலிருக்கிறது.

1915-௵ மே௴ 25௳ தமது ஆச்ரமத்தைச் ஸ்தாபித்தார். அதற்கு சத்தியாக்கிரஹ ஆச்ரமமென்று பெயரிட்டார். தமது உடைமைகளை எல்லாம் அதற்கு தத்தம் செய்தார். அதை தன் உயிரினும் மேலாக மதித்து வளர்த்து வந்தார். இந்தியாவிலுள்ள தேசபக்தர்களுக்கு இந்த ஆஸ்ரமம் ஒரு புண்ணிய க்ஷேத்திரம் போலவும் குருகுலம் போலவும் விளங்கியது.

அதில் காலை 4 மணிக்கு ஸ்நானம், 6 மணிக்குப் பிரார்த்தனை, 7 மணிக்கு ரொட்டியும் தயிரும், 10 மணிக்கு சாப்பாடு 12 மணி வரையில் ஓய்வு, 4 மணிக்கு சாப்பாடு, அப்புறம் பிரார்த்தனை, 8 மணிக்கு படுக்கை. ஆஸ்ரமத்தில் வேலைக்காரர்களை கிடையாது சகல வேலைகளையும் ஆசிரம வாசிகளே பார்க்க வேண்டும். சிறுவர்களுக்கு பள்ளிக்கூடமுண்டு. கதர்வேலை ஏராளமாய் நடைபெறும். ஆசிரமத்துக்கு 3½ லக்ஷம் பொருமான ஜங்கம சொத்துக்களும் இருந்தன.

1933-௵ ஆகஸ்டு-௴ 1௳, பட்டணத்தடிகள் 9 கோடி திரவியங்களையும் துறந்து துறவியானதுபோல், மூவாசையும் துறந்து தானும் ஒரு வரியல் ஆஸ்ரமத்தை துறந்து அரும் பெரும் துறவியானார். இக்காலத்தில் முற்றும் திரிகரண சுத்தியாய் துறந்த மகான் மகாத்மாவை தவிர வேறுண்டோ? இவர் மகான் அவதார புருஷர், உலகசிரேஷ்டர், துறவி என்பதற்கு ஐயமும் உண்டோ?

## ரேடியோ சொற்பொழிவு

உலகத்தில் சொல்லுக்கடங்காத மாயமான ஓர் சக்தி எல்லாவித வஸ்துக்களிலும், எங்கும் நிறைந்திருக்கிறது. இந்த

சக்தியை நான் உணர்கிறேன். ஆனால் பார்த்ததில்லை புறக்கண்களால் பார்க்கப்படும் வஸ்துக்கள் சோதனைக்கு உட்பட்டிருப்பதுபோல், அக்கண்ணால் பார்க்கவேண்டிய இந்த மகாசக்தி சோதனைக்கு உட்படுவதில்லை இந்தியர்களின் சக்திக்கு வெகு தூரத்திலிருக்கும் இந்தக் கடவுள் என்னும் சக்தியை நம்முடைய பகுத்தறிவாலேயே முடிவாக நிர்த்தாரணம் செய்ய வியலாது. வேதங்கள், உபநிஷத்துக்கள், புராணங்கள், மற்றுமுள்ள இந்து மதக்கிரந்தங்களை அவர் நம்புகிறார். அவதாரங்களும் மறுபிறப்பும் உண்டென்பதை ஒப்புக்கொள்ளுகிறார். விக்கிரக ஆராதனையை அவர் ஒப்புக்கொள்ளாமலில்லை.

இந்தியர்கள் தங்களுக்கு வழிகாட்டியாக இருப்பதற்கு காந்திஜீயைத் தவிர இந்தியாவில் வேறு மனிதரே இல்லை. இந்தியாவை அடிமை வாழ்க்கையில் வைத்திருக்கும் ஒவ்வொரு ஸ்தாபனங்களையும் காந்திஜீ தாக்குகிறார். இதாலி சர்வாதிகாரி முசோலினியும் ரஷிய சர்வாதிகாரியான லெனினும் மகாத்மா காந்தியடிகளும் தற்கால உலக சிரேஷ்டராகவும் அதில் காந்திஜீயே முதல் சிரேஷ்டராகவும் மேனாட்டாரும் அறிந்து போற்றுகிறார்கள்.

இந்தியாவில் பல பாகங்களில் உதித்து, பல பாஷைகளைப் பேசி பல மதங்களை அனுஷ்டிக்கும் கோடிக்கணக்கான இந்தியர்கள் அவரை தங்கள் தந்தைபோல் கருதுகிறார்கள். அவர் அகில இந்தியாவுக்கே பாபுவாகவும், பகவானாகவும் அவதார புருஷராகவும், துறவியாகவும், பாரதமாதாவின் அருந்தவப் புத்திர ரெத்தினமாகவும், இந்திய சுயராஜ்ஜியத்துக்கு வழிகாட்டியாகவும், உலக சிரேஷ்டராகவும் விளங்குகிறார்.

மகாத்மா காந்தி உண்மை, தூய்மை, அன்பு ஆகியவற்றின் உருவாக விளங்குகிறார். இம்மூன்றும்தான் அவருடைய மதிப்பிற்குரிய வேதாந்தம். அவர் வாழ்க்கையின் துறவு. இந்தியாவின் மூலை முடுக்குகளுக்குக்கூட எட்டியிருக்கிறது. உலகத்தில் தோன்றி தன்னலங் கருதாது வாழ்ந்த மஹான்களில் இவரும் ஒருவர். பயத்தையும், ஆசையையும், கர்வத்தையும் வென்ற பரமபுருஷர்.

## 26. காந்திஜீயின் புகழ்மாலை.

### இங்கிலாந்திற்கு காந்திஜீ செய்தி.

காந்திஜீ 1932ம் ஞு ஜனவரிமீ 4உ திங்கட்கிழமை காலை கைது செய்யப்பட்டபோது எல்வின் பாதிரியாரும் கூடவிருந்தார். அப்பொழுது காந்திஜீயை, இங்கிலாந்து மக்களுக்கு என்ன செய்தியுள்ளதென கேட்டபோது காந்திஜீ அடியில் வரும் கடிதத்தை எழுதிக்கொடுத்தார்.

என் அருமை எல்வின், நான் என்னுடைய தேசத்தினரை எவ்விதமாக நேசிக்கின்றேனோ அதேமாதிரியாக இங்கிலாந்து ஜனங்களை நேசிக்கிறேன் என்பதை நான் உங்களுக்குச்சொல்ல விரும்புகிறேன். அவர்களுக்கு எதிராக துரோத எண்ணத்துடனும், கெட்ட எண்ணத்துடனும் ஒருவித்ச் செய்கையும் செய்யவில்லை. கடவுள் கிருபையால் வருங்காலத்திலும் மேற்சொன்ன விதமாக நான் செய்யப்போவதில்லை. இப்பொழுதிருக்கும் சந்தர்ப்பத்தில் என்னுடைய சகோதரர்கள்பால் எவ்விதமாக நடந்துகொள்ளுவேனோ அதே மனப்பான்மையைத் தான் உங்கள்பாலும் கொண்டிருக்கின்றேன்.

அன்புள்ள தங்களுடைய, எம் கே காந்தி.

### காந்திஜீக்கு அமெரிக்கர்களின் உபசாரம்.

"கிருஸ்டியன் ஸபன்ஸ் மானீடர்" என்ற அமெரிக்கப் பத்திரிகை கூறுவதாவது:—

கோடிக்கணக்கான ஜன சமூகத்தின் க்ஷேமத்தையும், உரிமைகளையும் பற்றியதும், ஒரு பெரிய சாம்ராஜ்யத்தின் ஸ்தாபனத்தைப் பற்றியதுமான ஒரு பெரிய நாடகம் போன்ற சம்பவம் தனது உன்னத ஸ்தானத்தை யடைந்து இப்பொழுதே ஒரு முடிவுக்கு வந்தது என்று சொல்லலாம். அந்த சம்பவம் இளைத்து மெலிந்திருக்கும் காந்திஜீயைச் சுற்றியே ஏற்பட்டதெனலாம். அவரது உபவாசம் பளபளப்பான உடைகளணிந்த ராஜதந்திரிகள் பலரையும் பிரமிக்கச்செய்துவிட்டது. பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை ஆண்டு வருபவர்களுக்கு மிகுந்த சிரமம் விளைவித்து இரவு பகல் என்ற பேதமின்றி கூட்டங்கூடி பேசவும் திண்டாடவும் பண்ணிவிட்டது.

மேல்நாட்டாராகிய நாம் இந்தியாவைப் பற்றியும் அதன் கோடிக்கணக்கான மக்கள் செய்யும் போராட்டத்தையும் பற்றியும் அற்பமாய் நினைக்கலாம். ஆனாலும் அங்கு நடத்தப்படும் ஒரு முக்கியமான இயற்கைப் பொருட்பாடத்தின் பெருமையை நாமெல்லோரும் அறியவேண்டிய தவசியமாகும். மேல்நாட்டு நாகரீகம் தனது கைத்தொழிலின் பெருமையாலும் சாஸ்திர ஆராய்ச்சியாலும் உலகத்தையே ஆட்டிவைப்பதாகச் சொல்லிக் கொள்ளலாம். என்றாலும் இவை யாவற்றுக்கும் நாம் மிருக பலம் அல்லது சக்தியையே அடிப்படையாகக் கொண்டிருக்கிறோம் என்பதை யுணரவேண்டும். நமது நாகரீகத்திற்கு இதில்லாமல் ஒன்றும் செய்ய இயலாது.

நம்மை எதிர்த்துப் போராடுபவர்களிருந்தால் அதிகமான வலிமையால் நாம் எல்லோரையும் வென்றுவிடலாம். எதிர்த்துப் போராடுபவர்களில்லை என்றால் நமது வலிமையாவும் நஷ்டத்தையே யடையும். காந்தி ஸேனை யொன்றுக்கு தலைமை வகித்து வந்தால் ஒரே நாளில் அவரை வென்றுவிடலாம். ஆனால் இந்தியாவின் சிறையிலிருந்து கொண்டு தனது லக்ஷியத்திற்காக உபவாசமிருந்து உயிர் விடுவதைத் தடுக்கும் சக்தி நமக்கு இல்லவே யில்லை. இவ்விஷயத்தில் அவரது சக்தியே அதிக பலமுள்ளதாகும். காநதி சமாதானத்தையே விரும்பும் தன்மையரென்பதில் சந்தேகமில்லை இரும்பைப் போன்ற மிருக பலம் உபயோகிக்காமலேயே காரியங்களை சாதிக்கவேண்டுமென்றே அவர் விரும்புகிறார்.

1921ஸு டிசம்பர் மாதத்தில் காந்திஜீயின் ஆஸ்ரமத்துக்கு வங்காள கவிஞரான ஸ்ரீ ரவீந்திரநாத்தாகூர் போயிருந்தார். அப்போது மகாத்மா என்றால், மகாபுருஷன் என்று அர்த்தம். அம்மகாத்மா என்பது உபநிஷத்துக்களில் காணப்படும் வார்த்தை என்பதைச் சொல்லி தேவதூதரான காந்தியை மகாத்மா என்றழைத்தார். "புலிமிசையின்று மனிதர்க்செல்லாந் தலைப்படு மனிதன் காந்தி" என்றார்.

அமெரிக்காவைச் சேர்ந்த ரெவரண்டு ஹோம்ஸ் என்னும் பாதிரியார் மகாத்மாவை 'புருஷோத்தமர்' என்று அழைத்தார். இரண்டாவது லண்டன் மகாநாட்டுக்கு காந்திஜி சென்றிருந்த

போது ஸ்ரீமதி மூரியெல் லெஸ்டர் என்ற மாதுவின் கிங்ஸ்லி ஹால் என்ற ஏழைகள் விடுதியில் தங்கியிருந்தார். அவர் மூன்று வாரமாக காந்திஜீயுடன் தென்னிந்தியாவில் யாத்திரை செய்து வருகிறார்.

அவர் கூறியதாவது:— புலனடக்கம் என்ற கிறிஸ்துவக் கொள்கையை இன்று வாழ்க்கையில் நடத்திக் காட்டுபவர்களுள் மகாத்மா காந்திக்கு இணையாக வேறு எவருமில்லை. அவர் தேவ வாக்கின்படி தமது சொத்து முழுவதையும் விற்று ஏழைகளுக்குக் கொடுத்துவிட்டார். அவரைக்காட்டிலும் அதிகப் பொறுமையும் சகிப்புத்தன்மையும் வாய்ந்தவர்களை ஒரு இடத்திலும் காணமுடியாது. ஆசியாவை உருப்படுத்தும் தலைவர்களுள் அவர் தான் சிறந்தவர் என அபிப்பிராயப்படுகிறேன். லட்சக் கணக்கான ஜனங்கள் அவரைச்சுற்றி கூடுகிறார்கள் என்றும் சில தருணங்களில் நாறு கெஜதூரம் போவதற்கு இரண்டுமணி நேரமாகிறதென்றும் சொன்னார்.

பிரான்ஸு தேசத்து மகா பண்டிதரான ரோமன் ரோலண்டு என்பாரும், இவர் முப்பது கோடி இந்தியரை உறக்கத்திலிருந்து தட்டி எழுப்பியவர். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை ஆட்டி குலுக்கிவிட்டவர். சென்ற இரண்டாயிர வருஷ காலமாக இவ்வுலகில் என்றும் இருந்திரா சக்தியை மனித கோடிகளிடம் மூட்டிவிட்டவர். மனிதகோடிகளின் ராஜிய விவகாரங்களிலே அத்தகைய நீதியான இயக்கத்தை உண்டு பண்ணிய முதல் புருஷனுமாவர். "சத்தியமே கடவுள்" என்பது மகாத்மாவின் கொள்கை. சத்தியரூபியான பரம்பொருளை தரிசிப்பதற்காகவே உயிர் வாழ்கிறேன் என்று சொல்லுகிறார். அன்பு மிகுதியால் பிரஞ்சு பாஷையில் காந்திஜீ சரித்திரமும் எழுதியிருக்கிறார்.

காந்திஜீயும் திலகரும். ஸ்ரீ பாலகங்காதர திலகர் மேஜையின்பேரில் காந்திஜீயின் படம் எப்போதும் வைத்திருக்கும். அவரைப் பார்க்க வருகிறவர்கள் கொண்டுவரும் புஷ்பங்களை காந்தி படத்திற்கே சூட்டுவார். விடுதிப் புஷ்பமானால் அப்படத்தைச் சுற்றி தூவிவைப்பார். இதைப் பன்முறை கண்ட ஒருவர் திலகரைக்கண்டு கேட்டபோது திலகர் "இவரால்த்தான்

இந்தியாவுக்கு க்ஷேமம் உண்டாகவேண்டும் என்பது எனது துணிபு. இவர் வாய்ப்பேச்சுக்காரர் அல்ல. நினைத்ததை, சொல்வதைச் செய்தே தீருகிறவராவார். இவர் தென்னாப்பிரிக்காவில் நம்மவர்களுக்காகப் புரிந்த தொண்டு என்றும் மறக்கமுடியாது. இவர்தான் தேச சேவைக்கு ஏற்ற சரியான பேர்வழி சிறந்த மகான்" என்றார்.

திலகர் காலமாகுமுன் பாரதநாட்டுச் சுதந்தர முயற்சியை நடத்த யாருமில்லையே என்று அருகிலிருந்தவர்கள் எங்கியழுத போது, "யதா யதாஹி" என்ற கீதை மகாவாக்கியத்தில் பூர்ண நம்பிக்கைகொண்டு மகாத்மா காந்தியை தஞ்சம் அடையுங்கள் அவர் பார்த்துக்கொள்வார். இந்த சேவை இனி அவருடையது தான் என்று கூறி ஸ்ரீ பகவானை தியானித்துக்கொண்டே காலமானார். ஸ்ரீமான் திலகரிடத்து மாறாத பேரன்புகொண்ட மகாத்மாஜீ அவர் மயான யாத்திரையில் எழுந்தருளப் பண்ணிக்கொண்டு சென்றவர்களில் மகாத்மாஜீயும் ஒருவர் அப்பெருமான்மீது பேரன்பு மிகுதியால் தேச மஹாஜன கைங்கரியத்திற்கு திரட்டிய ஒரு கோடி ரூபாய்க்கு காந்தியடிகள் "ஸ்ரீ திலகர் ஸ்வராஜிய நிதி" என்று நாமகரணம் சூட்டினார்.

1922௵ மார்ச்சு௴ 23௳ கவர்ன்மெண்டுமீது விரோதமும் வெறுப்பும் உண்டாகும் வண்ணம் பேசியதற்கு ஆமதாபாத் ஜில்லா ஜட்ஜ் புரூம் பீல்டு ஆறு வருஷம் தண்டனை விதித்தார். அத்தீர்ப்பில் ஆங்கிலேயரொருவர் தன்னையும் தன் ஸ்தானத்தையும் மறந்து அடியில்கண்ட தீர்ப்பைச் செய்தார். அவை இங்கிலாந்து முதலான இடங்களிலும் பிரசுரிக்கப்பட்டது.

"மிஸ்டர் காந்தி, என்னுடைய வேலையை நீர் சுலபமாக்கிவிட்டீர். எப்படியெனில் குற்றம் செய்ததாக ஒப்புக்கொண்டிருக்கிறீர் என்றாலும், சரியான தண்டனை எவ்வளவு விதிப்பதென்பது கஷ்டமான காரியம். பெரிய மனிதன், சின்ன மனிதன் என்பதாக சட்டதிட்டத்தில் வேற்றுமை யில்லை. நான் இதுவரையில் விசாரித்து வந்தவர்கள், இனி விசாரிக்கப் போகிறவர்கள் ஆகிய யாருடனும் உம்மை ஒப்பிடமுடியாது. லட்சோப லட்சக்கணக்கான உமது தேச ஜனங்கள் உம்மை மகா

தேசாபிமானி என்றும் பெரும் தலைவர் யென்றும் மதித்திருக்கின்றனர். இதனை அலட்சியம் செய்வதற்கில்லை உம்முடன் மாறுபட்ட அபிப்பிராயங் கொண்டவர்களும் உயர்ந்த லட்சியங் கொண்டவரென உம்மைக் கருதுகிறார்கள். இன்னும் உம்மை பெருந்தன்மையான மகாத்மா என்றும் மதித்தனர். எனது கடமையை மதித்து ஆறு வருஷம் தண்டனை விதிக்கிறேன். கடைசியில் ஒருவார்த்தை இனி காலக்கிரமத்தில் இந்தியாவின் போக்கை மதித்து, உமது தண்டனையைக் குறைத்து, உம்மை விடுவிக்க கவர்ன்மெண்டுக்கு முடியுமானால் அதுகண்டு என்னைப் போல் யாவரும் அவ்வளது சந்தோஷம் அடையமுடியாது". என்றார்.

ராம தர்மமும், ததீசியின் தியாகமும், கண்ணனின் கீதா ஞானமும், புத்தரின் அன்பும், மஹாவீரரின் அஹிம்சையும், கன்பூஷியஸ் என்னும் சின ஞானியின் ஆத்ம தத்துவங்களும், இயேசுவின் அடக்கமும், முகம்மதின் சக்தியும், சைதன்யரின் பாரமார்த்திக உணர்வும், கபீரின் சிந்தையும், தர்மபுத்திரரின் பொருமையும், அரிச்சந்திரனின் சத்தியமும், ஜனகரின் சமபாவமும் ஒருங்கே திரண்டு ஓர் உருவாய் யிலங்குவது காந்தி. வாள், துப்பாக்கி, விமானம், பீரங்கி மேனாட்டின் ஆயுதங்கள். கீழ்நாட்டில் காந்திஜீயின் ஆயுதங்கள் ராட்டையே சுதர்சன சக்கரம், அன்பே சூலாயுதம், அஹிம்சையே பாணம், தர்மம் தழைப்பதே குறிக்கோள், சத்தியமே அவரது பூஷணம் இவைகளில் எவை வெற்றிபெறு மென்பதை காந்திஜீயின் பல சத்தியாக்கிரக போர்களின் முடிவினால் உலகம் அறிந்துகொண்டிருக்கிறது.

மனிதர்க்கெல்லாம் இன்று மேம்பட்டவராக விளங்குபவர் காந்தி "எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே யல்லாமல் வேறொன்றறியாதவர் காந்தி" இன்பமும் துன்பமும் சமமாக பாவிப்பவர் காந்தி, வீடும் சிறையும் ஒன்றேயென எண்ணுபவர் காந்தி, அயல் மாதரை மாதாவாக நினைப்பவர் காந்தி, உலகம் முழுதும் மறத்திமிர் பிடித்து, மிருக சக்தி மலிந்து, ஏகாதிபத்திய ஆசை மிகுந்து நாடுடன் நாடு தாக்கி, இரத்தக்கடல் கொந்தளிக்கும் சமயத்தில், அஹிம்சா சங்கை ஊதி உலகையே பிரமிக்கச் செய்தவர் காந்தி, காந்தியின் சாந்தோபதேசத்தை

இன்னும் உலகம் கேட்கவில்லையா? போர்கள் முடிக! எங்கும் சாந்தம் நிலவுக! அன்பு பெருகுக! சத்தியம் ஓங்குக! சமரசம் தழைக்க!

உலகில் சாதாரணமாய் மக்கள் தத்தம் நன்மையிலேயே கண்ணும் கருத்துமாய் இருக்கின்றனர். தம்முடைய நன்மைக் காகப் பிறருக்குத் தீங்கு செய்யவும் பலர் தயங்குவதில்லை. தமக்கு யாதொரு தீங்கும் வராமல் பார்த்துக்கொண்டு பிறருக் கும் சிறிது நன்மை செய்பவர்களை நாம் தர்மவான்கள் என்கி ரோம். ஆனால் சுயநலமென்பதை அறவே மறந்து தமக்கு எவ் வளவு துன்பம் நேர்ந்தாலும் சகித்துக்கொண்டு பிறருக்கு நன்மை செய்வதில் ஈடுபட்டிருப்பவர்கள் உலகில் அரியராவர். இவர்களையே "தனக்கென வாழாப் பிறர்க்குரியாளர்" என்று உலகம் போற்றுகின்றது. இத்தகையோருக்குள்ளே இந்நாளில் தலைசிறந்து விளங்குபவர் மகாத்மா காந்தியடிகளே. அவர் தியாகமூர்த்தி, அவர் வாழ்க்கை தியாக வாழ்க்கை, தமது உடல் பொருள், ஆவி அனைத்தையும் தேசத்தொண்டுக்கே அர்ப் பணம் செய்திருக்கிறார். மகாத்மா உலகத்துக்கே ஒரு புதிய வழிகாட்டியிருக்கிறார். இப்புது வழிக்கு "சத்தியாக்கிரஹம்" என்று பெயர். இதன் தத்துவம் என்ன? "சத்தியத்தில் உறுதி யாக நிற்கவேண்டும், அநீதியையும் அசத்தியத்தையும் எங்கே கண்டாலும் எதிர்த்துப் போராடவேண்டும், ஆனால் இந்தப் போரில் எதிரிக்கு எவ்வித தீங்கும் எண்ணவும் கூடாது. அவ னிடம் மனப்பூர்வமாக அன்பு செலுத்தவேண்டும், அவன் இழைக்கும் துன்பங்களையெல்லாம் கோபமின்றி சகித்துக் கொள்ளவேண்டும், அநீதியிடம் ஆழ்ந்த பகைமையும், அநீதி செய்பவனிடம் அளவிலா அன்பும் காட்டவேண்டும், இத்த கைய அஹிம்சையினால், அன்பினால், சத்தியத்தினால் ஹிம்சை யையும் அநீதியையும் அசத்தியத்தையும் வெற்றிகொள்ளலாம்" இதுதான் மகாத்மா உபதேசிக்கும் சத்தியாக்கிரஹ தர்மம். அவர் வெறும் உபதேசத்துடன் நிற்கவில்லை. தமது வாழ்க்கை யிலேயே இந்த தர்மத்தை அனுஷ்டித்துவருகிறார்.

காந்தி என்பது நம்மைப்போன்ற வெறும் எலும்பும், சதையும் இரத்தமும் கூடிய ஒரு மனித உருவமல்ல. அது ஆத்ம

சக்தியின் நிலைக்களன். நம்மால் செய்யமுடியாத காரியங்களையெல்லாம் அவர் செய்வதற்குக் காரணம் ஆத்மசக்திதான். இதை விதைத்தவர் காந்தி; வளர்த்தவரும் காந்தியே. சதையைத் துண்டு துண்டாக்கினும், மனம் தளராது, உணர்ச்சி குன்றாது, தூக்கு மேடையிலோ, துப்பாக்கி முனையிலோ, பட்டினி கிடந்தோ, உயிர் துறப்பதற்குத் தயாராயுள்ளவர். நம் தலைமீது வெடிகுண்டு மழை பெய்தாலும் நாம் சத்தியத்தையே பேசவேண்டும். மார்புக்கு நேர் துப்பாக்கிகள் நின்றாலும் முகமலர்ச்சியுடன் போர்புரியவேண்டும். ஸ்வதந்தர புருஷர்களாகவும், ஸ்திரீகளாகவும் வாழமுடியவில்லையென்றால் நாம் இறப்பதற்கு ஒருப்படல்வேண்டும். ஹிந்து மதத்துக்கு ஆணிவேர் போன்றதான அஹிம்சை மூலம் தேச சேவை செய்ய அவர் வாழ்க்கையையே அர்ப்பணம் செய்துவிட்டார். பகைமை எதையும் அழிக்கின்றது, அன்பு எதையும் வளர்க்கின்றது. இரண்டிற்கும் அவ்வளவு வித்தியாசமுண்டு. அவர் புகழ் உலக முழுவதும் பரவியிருக்கிறது. மகாத்மா என்றும், உலகசிரேஷ்டரென்றும், அவதார புருஷரென்றும் அவனர ஜனங்கள் கொண்டாடுகிறார்கள். செல்வர்கள், ஏழைகள், மேன்மக்கள், கீழ்மக்கள், அனைவரும் அவரைப் போற்றுகிறார்கள். அவரை உலகமே போற்றுகின்றது என்று சொல்லலாம்.

“அரிதரிது மானிடராதலரிது” என்பது ஔவை வாக்கு. உலகில் ஏறக்குறைய 160 கோடி மானிடர்கள் தற்போது வாழ்கின்றார்கள். இவ்வளவுகோடி மக்களிலும் தலைசிறந்த பெரியார் என்று பெயர் பெறுதல் எவ்வளவு அரியது பாருங்கள்! இவ்வளவு மகோந்நத பதவியை நமது மகாத்மா எவ்வாறு அடைந்தார்? இத்தகைய பெருஞ்சிறப்பைப் பெறுமாறு அவர் செய்த காரியம் என்ன?

மகாத்மா காந்தி உண்மை, தூய்மை, அன்பு ஆகியவற்றின் உருவாக விளங்குகிறார். இம்மூன்றும்தான் அவருடைய மதிப்பிற்குரிய வேதாந்தம். அவர் வாழ்க்கையின் துறவு. இந்தியாவின் மூலைமுடுக்குகளுக்குக்கூட எட்டியிருக்கிறது. உலகத்தில் தோன்றி தன்னலங் கருதாது வாழ்ந்த மகான்களில் இவரும் ஒருவர். பயத்தையும், ஆசையும், கர்வத்தையும், காமத்தையும் வென்ற பரமபுருஷர்.

டால்ஸ்டாய் ஞானிக்குப் பிறகு மனித சமூகத்தின் நன் மதிப்பையும் பக்தியையும் பெற்றவர் மகாத்மா காந்தியைத் தவிர.வேறு எவரும் இல்லை என்று மிஸ்டர் பிரெயில்ஸ் போர்ட் கூறுகிறார் அவரை அவதார புருஷரென்று கொண்டாடுகிறார் கள். அவருடைய தரிசனத்திற்காக கூடும் ஜனங்களின் கும் பலைப்போன்ற கும்பல் இதுவரை கூடியதாக சரித்திரத்தில் உபமானம் இருப்பதாகத் தெரியவில்லை. இந்தியா சுயேச்சை யடைய வேண்டியதற்கான உரிமையும், பாத்யதையும், மஹா உன்னதமாகவும், மிக மும்மரமாகவும் மகாத்மாமூலம் விளங்கு கிறது. அவர் இந்தியாவின் ஒரே பிரதிநிதியாகவும், இந்திய புதுவாழ்விற்கு பெருக்கமளிப்பவராகவு மிருக்கிறார் என்று ஸ்ரீமதி சரோஜினி நாயுடு கூறுகிறார்.

மகாத்மா காந்தி பாரதநாட்டின் ஒப்புயர்வற்ற சின்னம். இந்நாட்டின் நிதர்சனமான தியாகத்தின் அறிகுறி. அவர் சிறையிலேயே அடைக்கப்பட்டிருக்கலாம், எல்லாவற்றையும் விட்டுவிட்டு அவர் ஆஸ்ரமத்திலேயே மறைந்திருக்கலாம். உல கத்தின் ஒரு கோடிக்கு கொண்டுபோகப்படலாம்; ஆனால் அவ ருடைய ஒப்புயர்வற்ற செயல்களுக்கு, பாதுகாப்பினரும், பாத் தியஸ்தர்களுமான அவருடைய ஜனங்கள் இருதய கமலங்களில் ஒரு மாறுதலுமின்றி அவருடைய முடிவான நோக்கங்கள் இருக்கின்றன என்று முற்றும் துறந்த முனிவர் எல்வின் பாதிரியார் கூறுகிறார்.

கலியுகம் மறைந்தது, புதுயுகம் பிறந்தது. இந்தியாவில் ஆத்மார்த்திக தர்ம சமூக, ராஜிய விஷயங்களில் காந்திஜீயின் செல்வாக்கு மிக அபரிமிதமான வசிகரண சக்தி வாய்ந்த காந்தி ஜீயின் தோற்றமும், நம்பிக்கைகொள்ளும்படி செய்யக்கூடிய அவருடைய பெரும் நோக்கங்களும், எல்லாவிதமான எதிர்ப் பையும் நீக்கிவிடுகிறது. ஒவ்வொரு முறையும் அவர் இந்தியா வின் சர்வாதிகாரியாக நியமிக்கப்பட்டிருக்கிறார். உலகில் இது காறும் அரசியல் வாழ்க்கையில் கொலைப்போர் முறையே பெரி தும் கையாளப்பட்டு வந்திருக்கிறது. நமது மகாத்மாவோ அரசியலிலும் அஹிம்சா தர்மத்தைக் கையாண்டு வருகிறார். மகாத்மா காட்டும் வழியைப் பின்பற்றினல் உலகிலே குலைப்

போர் என்பதை அறவே ஒழித்துவிடலாமென்று அறிஞர் நம்புகிறார்கள். இத்தகைய பெருமை வாய்ந்த இம்மகானுடைய வாழ்க்கை வரலாற்றை அனைவரும் அறிந்துகொள்ளவேண்டும்.

1934ஞு ஜூலைமீ கராச்சிக்கு மகாத்மாஜீ விஜயம் செய்யும்போது உயர்தரப் போலீஸ் உத்தியோகஸ்தர் ஒருவர் மகாத்மா வரவேற்புக்கமிட்டி தலைவரான சேத் சிவரத்தின மெஹரோத்திராவைக் கண்டு மகாத்மா எங்கெங்கு செல்லுகிறாரோ அங்கெல்லாம் இரண்டு இரகசிய போலீஸ்காரர்கள் உடன் அனுப்பப்படுவார்களென்றும், இராஜப்பிரதிநிதியின் உயிர் எப்படி அருமையானதாக பாவிக்கப்படுகிறதோ அவ்விதமே காந்திஜீயின் உயிரும் அருமையானதாகக் கருதப்படுமென்றும் ஆகவே போலீசார் பொதுஜன ஊழியர்களின் உயிரைக் காக்கவும் கடமைப்பட்டிருப்பதாகவும் மகாத்மாவுக்கு யாதொரு ஆபத்தும் ஏற்படாமலிருக்கப் போலீசார் தக்க பந்தோபஸ்து செய்வார்கள் என்றும் கூறினர்.

## 27. கோரடாச்சேரி விஜயக்காக்ஷியும் எனது பேறும்.

1934ஞு பிப்பிரவரிமீ 15உ தஞ்சை ஜில்லா கொரடாச்சேரியில் மகர தோரணங்கள், கதர் வஸ்திரங்கள், தீபங்கள், புஷ்பங்களால் அலங்கரிக்கப்பட்ட உன்னதமான கொட்டகையில் எனது பெரியோர்கள் செய்த புண்ணியவசத்தாலும் எனது புத்திரன் தியாகராஜனின் இடைவிடா முயற்சியாலும் மகாத்மா காந்தியடிகளின் திருவுருவத்தைக் கண்குளிரக் கண்டு களித்துப் பேரானந்தமடைந்து, பாத்தியம் ஆசமனம் அர்க்கியம் கொடுத்து பழம், ஆட்டுப்பால், தேன், தேங்காய், திராக்ஷா, வாதாம் கொட்டை, பேரீச்சம்பழம், ஆரஞ்சுப்பழம், நிலக்கடலை, தாம்பூல முகவாசமும் வைத்து நிவேதித்து, கற்பூராலாத்தியும் செய்து, இப்புத்தகத்தின் முதலில் வரையப்பட்டதும் அன்பின் மேலீட்டால் என்னால் கவனஞ் செய்யப்பட்டதுமான அஷ்டோத்தர சத நாமாவளியால் திருவடிகளில் பரிமளமான ரோஜா மலர்களைக்கொண்டு அர்ச்சித்து அன்றும், பாரத மாதாவின் பொருட்டுக் காராக்கிரகம் சென்று தவம் புரிந்த புத்திர ரெத்தினங்களும், அவரது அடியார்களும், தண்டத் தலைவர்களும் (போலீஸ்) மன்னார்குடி ஆங்கிலேய தலைமைப்

போதகாசிரியர் (பிரின்ஸிபால்) பாதிரியாரும், மகமதியர்களும், ஹரிஜனங்களும், தாலூக்கா போர்டு தலைமை அதிகாரியும், மெம்பர்களும், பெண்களும், புமான்களும், பாலரும், விருத்தர்களும், தொண்டர்களும், புகைப்படம் (Photo) பிடிப்பவர்களும், சுருக்கெழுத்துக்காரர்களும், பத்திரிகை ரிப்போர்ட்டர்களும் பல்லாயிரக் கணக்கான ஜனங்களும் நிரம்பப்பெற்ற மாபெரும் சபையில், அஷ்டோத்தரமும் அன்னாரின் திருவிளையாடல்களும் அடங்கிய இச்சிறு புத்தகத்தை அரங்கேற்றி உலகத்தை உஜ்ஜீவிக்கவந்த மகானது சன்னிதானத்தில் கொடுக்க, அன்னார் அபயவரதமான தாமரை மலர்போன்ற அழகிய இரு கரங்களாலும் ஏற்றுப் புன்முறுவல் கொண்டு என்னையும் கடாக்ஷித்த காலத்தில், நானும் மறு புத்தகம் கொடுக்க அதில் காந்தி என்று தமிழில் கையொப்பமிட்டு அன்னாரின் கரத்தால் கொடுக்கும் பாக்கியமும் பெற்றேன்; புனிதமடைந்தேன். அப்பொக்கிஷம் யாவரும் கண்டுகளிக்கும்படிக் கொரடாச்சேரி சரஸ்வதி மாலில் சிரோரத்தினமாக விளங்குகிறது.

501 ரூபாய் பணமுடிப்பும், தங்கத் தக்ளியும் வெள்ளிக் கப்புகளும், தட்டுகளும் பல வரவேற்புப் பத்திரங்களும், தானியங்களும், காணிக்கையாக அளிக்கப்பட்டன. இச்சிறு கிராமத்தில் மொத்தத்தில் ரூ. 750 வரையில் வசூலாயிற்று.

இச்சிற்றூரில் ஐந்து நிமிஷம் மோட்டாரிலேயே தங்கி பணமுடிப்பைமட்டில் வாங்கிக்கொண்டு வாய் திறவாது போக வந்த காந்திஜீ, ஐம்பது நிமிஷம் தங்கியும் காலதாமசமாகி விட்டது என்று சிலர் எச்சரித்தும், என் பிரார்த்தனைக்குச் செவிசாய்த்து, சர்க்கரைப்பந்தலில் தேன்மாரி பொழிந்தாற் போலும், பஞ்சாமிர்தத்தில் பால் கலந்தாற்போலும் பிரசங்க மாரி பொழிந்து, யாவரையும் பரவசமடையச் செய்தார். அவருடைய பிரசங்கம் யாவரும் எளிதில் அறியும்படியான தனித் தனி வார்த்தைகளாகவும் கெம்பீரமான தொனியுடையதாகவுமிருந்தது. அப்பிரசங்கம் இன்னும் என்செவிகளில் ரீங்காரம் செய்துகொண்டிருக்கிறது. அவரது அழகிய திருவடிவமும், புன்சிரிப்பும் என்னிரு கண்களையும் விட்டு அகலவில்லை. அன்னாரின் அன்பு என்னிருதயத்தில் குடிகொண்டது. பரிசுகளையும்

வரவேற்பு பத்திரங்களேயும் ஏலம் போட்டு, அடியேன் அளித்த சிறிய வரவேற்பு புஸ்தகத்தைப் புன்சிரிப்புடன் பன்முறை புரட்டிப்பார்த்துத் தன்னுடன் கொண்டுபோய்விட்டதும் எனது பாக்கியவசமே. அன்னூர் வீற்றிருந்த இடத்துக்கு காந்திசேளக் என்று நாமகரணம் சூட்டப்பட்டது.

## 28. திருவுருவக்காக்ஷி.

1934ஞு பிப்ரவரிமீ 15உ 4 மணிக்கு, கொரடாச்சேரியில் நிர்மாணமான உன்னதக் கொட்டகையில் நான் தெரிசித்த காலத்தில் என் கண்குளிரக் கண்ட காந்திஜீயின் திருவுருவக் காக்ஷி வருமாறு:—

பொன்னிற வடிவமும், கண்கள் இருண்டு சாந்தமயமாகவும், காதுகள் பரந்து விரிந்தும், நீண்ட கரங்களும், சிறிய மீசையும், வழுக்கைத் தலேயும், விசால நெற்றியும், சிறிய உருவமும், முன்தந்தங்களற்றவரும், கிளிமூக்குப்போல நீண்டுவளேந்த நாசியும், 105 ராத்தல் இடையும், நாடி ஓட்டம் 98ம், ரெத்தக் கொதிப்பு 162 × 114ம், 5½ அடி உயரமும், 65 வயதும், இயற்கையாய் மரித்த ஆட்டுத்தோலாலான ரட்சை அணிந்த உபய திருவடிகளும், மெல்லிய வெள்ளேக் கதராடை முழங்கால் வரையிலும், அவ்வாறே சிறிய அங்கவஸ்திரமும், இடுப்பில் தேங்காய்நார் கயிற்றில் தொங்கிய கடிகாரமும், தனது புன்சிரிப்பால் உலகத்தையே வசீகரிக்கக்கூடிய திருமுகமண்டலம் பிரகாசிக்கப் பெற்றவராய் விளங்கலுற்ருர். அவரைப் பார்த்தவுடன் பரம சாந்தமும், பேரன்பும் வடிவெடுத்து வந்துளவோ என்று தோன்றியது.

குறிப்பு:— இடை, நாடி ஓட்டம், ரெத்தக்கொதிப்பு, டாக்டர் அன்சாரியால் பாடலீபுரத்தில் 5—4—34ல் சோதனே செய்தகாலத்தில இருந்தபடி எழுதப்பட்டது.

## 29. மாகாத்மா காந்தியடிகளின் முக்கிய குறிப்புகள்.

1869ம்ஞு அக்டோபர் மாதம் 2உ ஜனனமானூர்.

1876ல் இராஜகோட்டையில் பிரதமக் கல்வியும் 1881ல் பனிரண்டாவது வயதில் ஹரிஜனங்களோடு உயர்தரக் கல்வியும் பயின்ருர்.

1882ல் 13வது வயதில் சமவயதுள்ள ஸ்ரீமதி கஸ்தூரிபாய் என்னும் மாதுசிரோமணியைத் திருமணம் செய்துகொண்டார்.

1885ல் 16வது வயதில் தந்தை காபாகாந்தி காலமானுர்.

1887ல் மெட்ரிகுலேஷன் பரீக்ஷையில் தேர்ச்சிபெற்ருர். முதலாவது ஆண் குழந்தை பிறந்தது.

1887ஹு செப்டம்பர் மாதம் 4ம் தேதி, 18வது வயதில் பிரயாணமாகி லண்டன்மாநகரம் சேர்ந்து பாரிஸ்டருக்குப் படித்துத் தேர்ச்சி பெற்ருர்.

1891ம்-ஹு ஜூன் மாதம் 10ம் தேதி பாரிஸ்டர் கோஷ்டியில் சேர்க்கப்பெற்று, 12ம் தேதி தாயகம் திரும்பினுர். லண்டனிலிருந்த காலத்தில் தமது அருமையான தாய் பரமபதம் அடைந்துவிட்டதாய் இந்தியா வந்தவுடன் கேள்வியுற்ருர். இங்கிலாந்திலிருந்து திரும்பிய பின் 2வது குழந்தை பிறந்தது.

1891ம்-ஹு ஜூன் மாதத்தில் பம்பாய் ஹைகோர்ட்டில் பாரிஸ்டர் தொழில் செய்ய ஆரம்பித்தார்.

1893ம்-ஹு எப்ரல் மாதம் தாதா அப்துல்லா கம்பெனி வியாஜ்ஜிய விஷயமாய் வாதிக்க தென்னுப்பிரிக்காவுக்குப் பிரயாணமாகி, மே மாதம் நெட்டாலில் இறங்கி அவ்விடமிருந்து தங்க வைரச்சுரங்கங்கள் நிறைந்த அழகிய பிரிட்டோரியாவை அடைந்து ஒராண்டு வக்கில் தொழில் நடத்தி மேலேகண்ட வியாஜ்ஜியத்தை ராஜியாய் முடித்துவைத்துச் சன்மானம் அடைந்தார். வக்கில் தொழில் செய்ய அமர்ந்தபோது சரிசமானமாக வெள்ளேயருடன் வக்கில் தொழில்செய்வது வெள்ளேயருக்குப் பிடிக்கவில்லே. இவரை வக்கிலாகச் சேர்த்துக்கொள்ளக்கூடாதென வெள்ளேயர்கள் எதிர்த்தார்கள். முடிவில் அவர்கள் வாதம் பலிக்கவில்லே. அங்கு இந்தியருக்கு ஏற்பட்டிருக்கும் சகல துன்பங்களேயும் நீக்குவதற்காக 1893ம்-ஹு மே மாதம் தென்னுப்பிரிக்கா இந்திய காங்கிரஸ் சபையை ஸ்தாபனம் செய்தார்.

நெட்டால் அரசாங்கத்தார் இந்திய தொழிலாளர்கள் மீது வருஷமொன்றுக்கு தலா 25 பவுன் வரி விதித்தார்கள். அது காங்கிரஸ் கிளர்ச்சியால் மூன்று பவுனுக்கு மாற்றப்பட்டது.

பிறகு சத்தியாக்கிரகம் முதலிய பெரும் கிளர்ச்சியை நடத்தியதில் பதினாயிரம் பேர்கள் சிறை சென்றார்கள். சிலர் உயிர் துறந்தார்கள். அதன் பயனாக அவ்வரி ஒழிந்தது.

1895ல் தென்னாப்பிரிக்காவில் வெள்ளையர்கள் இந்தியர்களை அடிமைகளாகவும், கூலிகளாகவும், நடத்திவருவதைப் பார்த்துப் பொறுக்காமல், இந்தியர்களின் முன்னேற்றத்திற்கான இயக்கத்தை ஆரம்பம் செய்தார். அவர் இந்தியா திரும்புங்கால் அவருக்கு அநேக உபசாரக் கூட்டங்களும் விருந்துகளும், விலையுயர்ந்த தங்கம், வெள்ளி, வைரப் பரிசுகளும் அளித்தார்கள். எல்லாப்பரிசுகளையும் திருப்பிக்கொடுத்து அவற்றின் பராமரிப்புக்குத் தர்மகர்த்தர்களை ஏற்படுத்தி சமூக நன்மைக்கு உபயோகப்படுத்த தர்ம சாஸனம் எழுதி பாங்கியில் பத்திரப் படுத்தப்பட்டது. அது இன்றளவும் பத்திரமாக இருந்து வருகிறது.

1896ல் இந்தியாவுக்குத் திரும்பிவந்து பம்பாய், கல்கத்தா சென்னை முதலிய இடங்களில் பிரபல தலைவர்களையும் பத்திரிகாசிரியர்களையும் சந்தித்துத் தென்னாப்பிரிக்கா இந்தியர்களின் நிலைமையைக் கூறி அவர்களுடைய ஆதரவையும் ஆங்கிலேய இந்தியப் பத்திரிகைகளின் ஆதரவையும் பெற்றார். அத்துடன் ஆங்காங்கு பிரசாரமும் செய்துவிட்டு அவசரமாகப் புறப்பட்டு வரும்படி தந்தி வந்ததும் 1896 டிசம்பர் மாதம் குடும்பத்துடன் தென்னாப்பிரிக்காவுக்குப் பிரயாணமாகி 1897 ஜனவரி மாதம் 13உ டர்பன் துறைமுகம் வந்திறங்கியதும் தவறான செய்திகளால் ஆத்திரம் மூட்டப்பட்ட வெள்ளையர் கூட்டத்தால் தாக்கப்பட்டார். அப்போது அவருக்கு 9, 5 வயதுள்ள புதல்வர்கள் இருந்தார்கள். மீண்டும் வக்கீல் தொழில் நடத்திவந்தார். அப்போது நெட்டாலில் 3வது குழந்தை பிறந்தது.

1899ல் போயர் யுத்தம் நடைபெற்ற காலத்தில் காயம் படுபவர்களுக்குப் பிரதம சிகிச்சைகள் கொடுப்பதற்காக ஓர் ஆம்புலன்ஸ் படையைத் திரட்டி, தான் தலைமை வகித்து யுத்தகளத்தில் ஆங்கிலேயருக்கு உதவிபுரிந்தார். 4வது குழந்தை பிறந்தது.

1901ல் தேக அசௌக்கியமேற்பட்டதால் இந்தியாவுக்குத் திரும்பி வந்தார். அந்த வருஷத்திய காங்கிரஸ் மகாசபை கல்கத்தாவில் ஸ்ரீ வாச்சாவின் அக்கிராசனத்தின் கீழ் கூடியது. மகாத்மா காந்தி சென்றிருந்த முதல் காங்கிரஸ் இதுவே. அதில் குமாஸ்தா வேலை திறம்படச் செய்தார். காரியதரிசி கோஷ் சட்டைக்குப் பொத்தான் போடும் தொண்டு முதலிய பணிகளையும் செய்தார். தென்னாப்பிரிக்கா இந்தியர் குறை விஷயமாய் இவர் கொண்டுவந்த தீர்மானத்தை நிறைவேற்றிய பின் பர்மா, காசி சென்று பம்பாயில் வக்கீல் தொழில் நடத்தி வந்தார்.

1902ம வருஷம் மார்ச்சு மாதம் பம்பாய் ஆபீசை மூடிவிட்டு ஆப்பிரிக்கா பிரயாணமானார்.

1903ல் பிரமஞான சங்க ஆராய்ச்சி, விவேகானந்தா இராஜயோகம், பதஞ்சலி யோக சூத்திரம் முதலிய மத சம்பந்தமான நூல்களைப் படித்து, உடைமைகள் எல்லாவற்றையும் அடியோடு தியாகம் செய்தாலன்றி இறைவன் தொண்டில் ஈடுபட முடியாதென்று அறியலானார்.

1904ம் ஆண்டு "போனிக்ஸ்" ஆசிரமத்தை ஸ்தாபித்துவிட்டு "இந்தியன் ஒபினியன்" என்ற பத்திரிகையையும் ஆரம்பித்தார். ஜோகான்ஸ் பர்க்கில் பிளேக் பரவியபோது ஜனங்களுக்கு உதவி செய்தார்.

1906ல் ஆப்பிரிக்காவில் வசிக்கும் ஸுலூக்கள் கலகம் செய்ததால் அவர்களுடன் பிரிட்டிஷார் யுத்தம் செய்யவேண்டியதாயிற்று. டிரான்ஸ்வால் வாசிகள் அனைவரும் யுத்தத்திற்கு ஆயத்தமானார்கள். காந்திஜீயும் சில நண்பர்களுடன் ராணுவத்தில் சேர்ந்துகொண்டார். காந்திஜீ யுத்தத்தில் முதல்தரமான தொண்டாற்றினர். அடிபட்ட ஸுலூக்கள் இவரிருந்திராவிட்டால் கவனிக்கப்படாமல் போர்க்களத்தில் காயத்துடன் தவிக்க விடப்பட்டிருப்பார்கள். காந்திஜீயும் அவரது நண்பர்களும் இவர்களுக்குச் சிகிச்சைகள் செய்தார்கள்.

1900ம் வருஷத்திலிருந்து, தான் ஓரளவு அனுஷ்டித்து வந்த பிரம்மசரிய விரதத்தை 1906ம் வருஷத்தில் ஆயுள் விரதமாகக் கைக்கொண்டார்.

1908ஹு ஜனவரி மாதம் 10உ சர்டிபிகேட் பெறாதவர்கள் டிரான்ஸ்வாலை விட்டு வெளியேறும்படி செய்த உத்திரவுக்குக் கீழ்ப்படியாதபடியால் இவருக்கு இரண்டு மாதம் வெறுங்காவல் தண்டனை விதித்தார்கள் I. ஜனவரி மாதம் 30உ சமாதானத்தின் பேரில் பிரிட்டோரியாவில் விடுதலை செய்யப்பட்டார்.

1908ம் வருஷம் அக்டோபர்மீ 7உ இரண்டு மாதம் கடுங்காவல் தண்டனை அடைந்தார் II.

1909ம் ஆண்டு பிப்ரவரிமீ 25உ மூன்று மாதம் கடுங்காவல் தெண்டனை அடைந்தார் III.

1911ல் கவர்மெண்டாருக்கும் காந்திஜீக்கும் ஓர் சமரச முடிவு ஏற்பட்டது.

1912ல் செப்டம்பர் மாதத்தில் மூன்று பவுன் தலை வரியை எதிர்த்துச் சத்தியாக்கிரகம் செய்தார்.

1913ஹு ஜனவரிமீ ஸ்மட்ஸ் காந்தி ஒப்பந்தம் ஏற்பட்டது.

1914 ஜனவரிமீ தென்னாப்பிரிக்கா சர்க்காருடன் சமரசம் செய்து கொண்டதினால் தென்னாப்பிரிக்கா சத்தியாக்கிரகம் முடிவடைந்தது. 1893 முதல் 1914 வரையில் தென்னாப்பிரிக்கா வாசம்; செப்டம்பர்மீ லண்டனுக்குப்போய் இந்தியா வந்து யுத்தத்திற்கு ஆள் சேர்த்துக்கொடுத்தார். வாலண்டியர் படைக்காக 80 பேர் தயாரித்தார். எல்லோரும் தங்களால் இயன்றவரையில் சுறுசுறுப்புடன் வேலைசெய்தார்கள். திடகாத்திரமுள்ள ஆண்மக்கள் போர் பயிற்சி பெறத் தொடங்கினார்கள். கிழவர்கள், பலவீனர்கள், ஸ்திரீகள் முதலியோர் உடை தைப்பதிலும் காயப்பட்டவர்களுக்குக் கட்டுக்கட்டுவதிலும் ஈடுபட்டார்கள். ஸ்ரீமதி சரோஜினிதேவி உடுப்பு தைக்கும் சங்கத்தின் அங்கத்தினராயிருந்தார். அவருடன் தனக்கு முதன் முதல் பழக்கம் ஏற்பட்டது இப்போதுதான். தலைமை அதிகாரியுடன் மனஸ்தாபம் ஏற்பட்டு 14 நாள் உபவாச விரதம் பூண்டார். பத்து வருஷத்திற்குப் பிறகு இந்தியா திரும்பி பம்பாயை அடைந்து மாஜிஸ்ட்ரேட்டு கோர்ட்டில் வழக்கு நடத்திக் கொண்டிருக்கையில், தன் கக்ஷிக்காரர் பொய் சொல்லித் தன்னை ஏமாற்றியதைக் கண்டு மாஜிஸ்டிரேட்டிடம் கேஸைத் தள்ளி

விடும்படிச் சொன்னார். யாவரும் ஆச்சரியமும் மகிழ்ச்சியுமடைந்தார்கள். அவரது கக்ஷிக்காரரும் கோபிக்கவில்லை. வக்கில் சங்கத்தாருக்கும் அவர்பால் அதிக மதிப்பு ஏற்பட்டது. சத்தியாக்கிரஹ விஷயமாய் பம்பாய் அரசாங்கத்தின் காரியதரிசி "சத்தியாக்கிரகம் பயமுறுத்தல்தானே! வலிமை பொருந்திய ஓர் அரசாங்கம் பயமுறுத்தலுக்கு இணங்கிவிடுமென்று நினைக்கிறீர்களா" என்று கேட்டார். நமது காந்தியடிகள், பிரிட்டிஷ் அரசாங்கம் வலிமை பொருந்திய அரசாங்கம் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை ஆனால் சத்தியாக்கிரகம் தோல்வியறியாத ஆயுதமென்று எனக்கு நிச்சயமுண்டு என்றார். அப்போது காரியதரிசி தலையை அசைத்துக்கொண்டு 'பார்க்கலாம்' என்றார்.

1915ஹல் சர்க்கார் கெய்சரி ஹிந்து மெடல் கொடுத்தார்கள். மறுபடியும் இந்தியா திரும்பினார். மே மாதம் 25உ ஆமதாபாத்தில் சத்தியாக்கிரக ஆச்ரமம் ஸ்தாபனம் செய்தார். ஜூலை மாதம் 31உ ஒப்பந்தக்கூலி யனுப்பும் முறை நிறுத்தப்பட்டது. ஆமதாபாத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம்செய்ய பிரதிக்ஞை செய்தார்கள். பின் தவறியபடியால் உபவாச விரதம் பூண்டார். மூன்று நாளில் உத்தேசம் கைகூடி முதலாளிகள் இணங்கிவிட்டபடியால் உபவாசம் நிறுத்தப்பட்டது. கெய்ராவில் ஏழைகள் வரி கொடுக்கமுடியாமலிருந்த போது கவர்ன்மெண்டார் ஜப்தி செய்தார்கள். குடிகள் கட்டுப்பாடு செய்தது பேரில் வரி வசூல் நிறுத்தப்பட்டது.

1917ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10உ பீஹார் மாகாணத்தில் சம்பாரனில் வெள்ளைத் தோட்டக்காரர்களிடம் வேலை செய்யும் இந்தியர்களுக் கேற்பட்டிருக்கும் கஷ்டத்தை நீக்க பாட்னு சென்றார். சம்பாரனுக்கு ஏப்ரல் 16ம் தேதி செல்லுகையில் ஜில்லா மாஜிஸ்திரேட் அவரை அந்த ஜில்லா எல்லைக்குள் வரக்கூடாதென்று உத்திரவிட்டார். அவ்வுத்திரவை மீறி மகாத்மாஜி சம்பாரனுக்குச் சென்றார். ஏப்ரல் 18ந்தேதியன்று மாஜிஸ்திரேட் முன்னிலையில் ஆஜராகி ஒரு வாக்குமூலம் கொடுத்தார். மாஜிஸ்திரேட் ஒன்றும் தெரியாமல் விழித்து அரசாங்கத்தார் அவர் பேரிலிருக்கும் வழக்கை வாபீஸ் வாங்கிக்கொண்டு விட்டதாக அறிவித்தார். இது சத்தியாக்கிரகத்தின் வெற்றியாக முடிந்தது.

அதன்பின்னர் அஹமதாபாத் தொழிலாளிகளுக்கும், முதலாளிகளுக்கும சம்பளத்தகராறு ஏற்பட, காந்திஜீ தலையிட்டு உபவாசமிருந்து தகராரை வெற்றியுடன் முடித்துவைத்தார். கெய்ராவில் விவசாயிகளுக்கு அரசாங்கத்தால் ஏற்பட்ட தொல்லைகளைத் தீர்க்க, தான் சென்று அவர்களை சத்தியாக்கிரக தத்துவத்தில் ஈடுபடச்செய்து வெற்றிகரமாக அவர்கள் கஷ்டங்களையும் நீக்கினர்.

1918ல் மஹா யுத்தத்திற்கு ஆள் திரட்டி ஆங்கிலேயருக்கு உதவிபுரிந்தார்.

1919ஷு தேசியக்கிளர்ச்சியை அடியோடு அடக்க கவர்ன்மெண்டார் ரௌலட் சட்டத்தை சிருஷ்டித்தார்கள். காந்திஜீ இந்தக் கொடிய சட்டத்துக்கு இந்திய மக்கள் பணியக்கூடாதென்று தீர்மானம் செய்தார். ஏப்ரல்மீ 6உ இந்தப் போர் தொடங்குவதென்றும் அன்றைய தினத்தை தேசமெங்கும் சத்தியாக்கிரக தினமாகக் கொண்டாடவேண்டுமென்றும் கட்டளையிட்டார்.

அவ்வாறே பாரதநாட்டிலே இமசேதுபரியந்தம் எண்ணிலடங்காத நகரங்களிலும், கிராமங்களிலும், வேலை நிறுத்தம் நிகழ்ந்தது. ஜனங்கள் கடைகளையடைத்து உபவாசமிருந்து கடவுளைத் தொழுதார்கள். தேசமெங்கும் அமைதியாக நடைபெற்றது. இதுவே இவர் செய்த முதற்காரியம். அமிர்தஸரஸ் நகரிலே சிறு கலகம் நடந்தது. ஜெனரல் டயர் தமது படையுடன் அவ்விடம் வந்து கூட்டமே கூட்டக்கூடாதென முந்திய இரவில் கட்டளையிட்டிருந்தாராம். அது ஜனங்கள் யாருக்கும் தெரியாது. ஏப்ரல்மீ 13உ விசேஷ ஹிந்து திருநாளுக்கு ஜாலியன் வாலாபாக் என்னுமிடத்திலே ஜனங்கள் கூடியிருந்தார்கள். அதில் பெண்களும் குழந்தைகளும் அதிகம். அவர்கள் சாந்தமாகவே யிருந்தார்கள். ஜெனரல்டயர் மெஷின் பீரங்கிகளுடன் அவ்விடம் வந்து எச்சரிக்கையும் செய்யாமல் நிராயுதபாணிகளான ஜனங்களைச் சுடும்படி கட்டளையிட்டார். தோட்டாக்கள் தீரும்வரையில் துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது. அந்த இடத்தைச் சுற்றி பெரிய மதிலிருந்தபடியால் ஜனங்கள் ஓடமுடியவில்லை. ஐந்நூறு அல்லது அறுநூறு ஹிந்துக்கள் கொல்லப்பட்டார்கள். காயமடைந்தவர்களோ இன்னும் அதிகம்

எங்கும் ராணுவச்சட்டம் அமுலுக்கு வந்தது. நிராயுத பாணிகளான ஜனங்களின்மீது ஆகாய விமானங்கள் குண்டுகளை வருஷித்தன. மிகவும் மதிப்பு வாய்ந்த கனவான்கள் ராணுவக் கோர்ட்டுகள் முன் கொண்டுவந்து நிறுத்தப்பட்டனர்; சவுக் கால் அடிக்கப்பட்டனர்; வயிற்றால் நகர்ந்து செல்லும்படி கட்டாயப்படுத்தப்பட்டனர். இன்னும் மிக்க மானக்கேடுகளுக்கு ஆளாக்கப்பட்டனர். குற்றம் செய்த டயருக்கும் வெகுமதி யளிக்கப்பட்டது. எப்ரல்மீ 18உ தேசத்தில் ஹிம்சை ஏற்பட்டபடியால் சத்தியாக்கிரகத்தை நிறுத்தினர்.

1919ஷு அக்டோபர்மீ பஞ்சாப் படுகொலை விஷயமாக அரசாங்கத்தார் நியமித்த அண்டர் கமிட்டியில் யாவரும் சாட்சியம் கொடுக்க மறுக்கவே காங்கிரஸ் நியமித்த கமிட்டிக்காகப் பஞ்சாப் மாகாணத்தில் சுற்றுப்பிரயாணம் செய்து அவ்வறிக்கையைத் தயார் செய்தார். டிசம்பர் மாதத்தில் பண்டித மோதிலால் நேரு தலைமையில் நடைபெற்ற அமிர்தசரஸ் காங்கிரசில் அரசியல் திருத்த சம்மந்தமான ஓர் தீர்மானங் கொண்டு வந்தார். அதில் கட்சிப்பிளவுகள் ஏற்படும் போலிருந்ததை ராஜியாகத் தீர்த்துவைத்தார்.

1920-ம் ஆண்டு ஜூன் மாதம் 22ந் தேதி வைசிராய்க்கு ஒத்துழையாமை இயக்கம் ஆரம்பிக்கப் போவதாக ஓர் கடிதம் எழுதினர். ஆகஸ்ட் மாதம் முதல் தேதி தமக்குக் கிடைத்த கெய்சரீஹிந்து மெடலைத் திருப்பியனுப்பி ஒத்துழையாமையை ஆரம்பித்தார். செப்டம்பர் மாதத்தில் கல்கத்தாவில் லாலா லஜபதியின் தலைமையின்கீழ் நடைபெற்ற விசேஷ காங்கிரசில் ஒத்துழையாமைத் திட்டத்தை நிறைவேற்றிவைத்தார். நவம்பர் மாதம் ஆமதாபாத்தில் தேசிய சர்வ கலாசாலையை ஏற்படுத்தினர். டிசம்பரில் நாகபுரியில் கூடிய காங்கிரசில் ஒத்துழையாமைத் தீர்மானம் ஊர்ஜிதம் செய்யப்பட்டது.

1921ம் வருஷம் பிப்ரவரி மாதத்தில் கானட்டுக் கோமகனுக்குப் பகிரங்கக் கடிதம் எழுதினர். மே மாதம் லார்டு ரீடிங்குடன் பேட்டி நேர்ந்தது.

1921ஷு காந்தியின் காரியங்கள் உச்சஸ்தானம் அடைந்திருந்தன. கடவுளைப்போல் அவரை எல்லோரும் கும்பிட்டு

வணங்கினர். அவ்வாண்டிலே தேசத்தில் சுதந்திர தேவி ஆனந்தநர்த்தனம் செய்தாள். ஒரு நூற்றாண்டுக்கு மேலாக உறங்கிக்கிடந்த ஜனங்கள் முன்னெப்போதும் இல்லாத வண்ணம் கண்விழித்தெழுந்து சுயராஜியக்கிளர்ச்சியில் ஈடுபட்டார்கள். தியாகமூர்த்தியான மகாத்மா தொடங்கிய இயக்கத்திலே தியாகமே தலைசிறந்து விளங்குமன்றோ. நூற்றுக்கணக்கான வக்கீல்கள் தங்கள் தொழிலை விட்டுத் தேச சேவையில் ஈடுபட்டார்கள். ஆயிரக்கணக்கான மாணாக்கர்கள் பாடசாலைகளைப் பகிஷ்காரம் செய்தார்கள். லக்ஷக்கணக்கான பாமர ஜனங்கள் காங்கிரஸ் அங்கத்தினராயினர். வாக்காளர்களில் பெரும்பாலோர் சட்டசபைகளை பஹிஷ்க்கரித்தனர். சுயராஜிய நிதிக்கு ஒருகோடி ரூபாய் வசூலாயிற்று. வருஷக்கடைசியிலும் 1922ம் வருஷத்திலும் சுமார் 30000 இந்தியமக்கள் தங்கள் தேச காரணமாகச் சிறை புகுந்தாகள். ஆமதாபாத்தில் காங்கிரஸ் மகாசபை கூடி இந்திய ராஜீய இயக்கத்துக்கு காந்திஜீயே சர்வாதிகாரியென்றும், அவருடைய சொற்படியே யாவரும் நடக்க வேண்டுமென்றும் ஓர் தீர்மானமும் பாசானது. அக்காலத்தில் 25 ஆயிரம் ஸ்திரீ புருஷர்கள் வரையில் சிறைப்பட்டார்கள்.

1922-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 9ந் தேதி பர்தோலியில் சத்தியாக்கிரகம் ஆரம்பிக்கப்போவதாக வைசிராய்க்குக் கடிதம் எழுதினார். எழுதின பின்னர் சௌரி சௌரா கோரசம்பவம் நடைபெற்றதைக் கேள்வியுற்று, தேசத்தில் ஹிம்சை முறை குறையவில்லை எனக்கருதி பர்தோலி சத்தியாக்கிரஹத்தை நிறுத்திவிட்டார். மார்ச்சு மாதம் 10உ கைது செய்யப்பட்டு, அகமதாபாத்து ஜில்லா ஜட்ஜு முன் விசாரணை நடைபெற்று 23ந் தேதி ஆறு வருட தண்டனை விதிக்கப்பட்டார் IV.

1924-ம் ஆண்டு ஜனவரி மாதம் 13ந் தேதி மஹாத்மாவிற்கு வயிற்றில் உபத்திரவம் ஏற்பட்டு, பூனா சாசூன் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்பட்ட செய்தி இந்தியர்களைத் துக்கத்திலாழ்த்தியது. ஆனால் கர்னல் மடாக் என்ற பிரபல வைத்தியரால் சிகிச்சை செய்யப்பட்டு சௌக்கியமடைந்தார். பிப்ரவரிமீ 5உ அரசாங்கத்தார் அவரை யாதொரு நிபந்தனையுமின்றி விடுதலை செய்தனர். எப்பிரல்மீ யங் இந்தியா ஆசிரியர் பதவியை மறுபடியும் ஏற்றுக்கொண்டார். செப்டம்பர்மீ 11உ

ஹிந்து முஸ்லீம் ஒற்றுமைக்காக டில்லியில் 21 நாள் உபவாச மிருந்து வெற்றியுடன் உபவாசத்தை முடித்தார். பெல்காம் காங்கிரசில் தலைமை வகித்தார். 1924-ம் ஆண்டிலிருந்து 1928ம் ஆண்டு கல்கத்தா காங்கிரஸ் வரையில் ராஜீய விஷயங்களைச் சுயராஜ்யக் கட்சியார்களிடம் ஒப்புவித்துவிட்டு, கதர் இயக்கத்தை விருத்தி செய்வதில் காலங்கழித்தார்.

1925-ம் வருஷத்தில் மே, ஜூன் மாதங்களில் வங்காளத்தில் விசேஷ யாத்திரை செய்தார். நவம்பர் மாதம் 26ந் தேதி சத்திய சோதனை என்ற தமது சரிதத்தை எழுத ஆரம்பித்தார்.

1927-ம் ஆண்டு தென் இந்தியாவிற்கு வந்துகொண்டிருக்கையில், இரத்தக்கொதிப்பினால் தேக சுகங்கெட்டு மைசூர் நந்தி மலையில் சில மாதங்கள் இருந்துவிட்டுத் தென்னிந்தியா சுற்றுப் பிரயாணம் செய்தார். சென்னையில் நடைபெற்ற காங்கிரஸ் மகா நாட்டிற்கு விஜயம் செய்தார்.

1928-ம் ஆண்டு கல்கத்தாவில் மோதிலால் நேரு தலைமையில் நடைபெற்ற காங்கிரசில் நேரு அறிக்கை சம்பந்தமாக ஏற்பட்ட பிளவை சமரசப்படுத்தினார்.

1929-ம் ஆண்டு லாகூரில் நடைபெற்ற காங்கிரசில், நேரு அறிக்கையை ஓராண்டுக்குள் அரசாங்கத்தார் அங்கீகரிக்காததால் பூரண சுயேச்சை தீர்மானத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றி வைத்தார். அதன் பயனாகச் சத்தியாக்ரஹம் நடத்தும் பொறுப்பை ஏற்றுக்கொண்டார்.

1930-ஹு பிப்ரவரி மாதம் 15உ அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி காங்கிரசுக்குச் சர்வாதிகாரியாக அவரை நியமித்தது. மார்ச்சுமீ உப்பு வரி முதலிய 11 நிபந்தனைகளை நிர்ணயித்து 80 தொண்டர்களுடன் உப்புச் சத்தியாக்கிரகம் செய்ய டாண்டிக்குப் புறப்பட்டார். அப்போது உலகமே அவருடைய செய்கையைக் கவனித்து வந்தது. ஏப்பிரல்மீ 6உ டாண்டியில் உப்புச்சட்டத்தை மீறி உப்பைக் காய்ச்சினார். அரசாங்கத்தார் இனி அவரை விட்டுவைத்தால் மிகவும் ஆபத்தாகுமென்று கருதி மேமீ 5உ கைது செய்து அரசாங்கக் கைதியாக (விசாரணை நடத்தாமல்) எரவாடாவில் சிறை வைத்தனர். V.

1931ம் ஆண்டு பிரபல ராஜீயவாதிகளின் மத்தியஸ்தத்தால் ஜனவரி 25ந் தேதி காரியக்கமிட்டி அங்கத்தினர்களுடன் விடுவிக்கப்பட்டார். அதன்பின்னர் வைஸிராய் இர்வின் பிரபுவுடன் அரசாங்கமாளிகையில் தினம் சந்தித்துப்பேசவே அதன் பயனாக மார்ச்சு 5ந்தேதி காந்தி-இர்வின் ஒப்பந்தம் ஏற்பட்டது.

ஜனவரிமீ 26உ ராஜீயக்கைதிகள் விடுவிக்கப்பட்டனர். மார்ச்சு மாதக்கடைசியில் கராச்சியில் காங்கிரஸ் கூடி காந்தி-இர்வின் ஒப்பந்தம், பூரண சுயேச்சை முதலியவைகளை ஊர்ஜிதம் செய்தது. ஜீவாதார உரிமைகள், கடன் சுமை முதலிய பெரும் பிரசினைகளைப் பற்றி ஆராய்ச்சி செய்து அறிக்கை வெளியிடக் கமிட்டிகள் நியமிக்கப்பட்டன.

செப்டம்பர் மாதம் இரண்டாவது வட்டமேஜை மகாநாட்டிற்கு, காங்கிரசிற்கும் தேசத்திற்கும் தனிப்பிரதிநிதியாக இங்கிலாந்து சென்றார். நவம்பர்மீ 17உ காங்கிரஸ் கொண்டிருக்கும் அபிப்பிராயத்தைச் சபையில் தெரிவித்தார். சபையிலிருந்தவர்கள் அவருடைய சொல்வன்மை, மறுக்கமுடியாத ஆதாரங்கள், புன்னகை புரிந்த திருமுகம் இவைகளைக் கவனமாய்ப் பார்த்து ஆச்சரியமும் பிரமையும் கொண்டார்கள்.

டிசம்பர்மீ 28உ பம்பாய் வந்திறங்கினார். வந்த சமயம் நிலைமை மிக்க நெருக்கடியாக இருந்தது. வந்திறங்கியதும் காரியக்கமிட்டியைக் கலந்துகொண்டு வைசிராய் வெல்லிங்டன் பிரபுவுக்கு, அவரைச் சந்தித்துச்சமரசப்படுத்த இடம் கொடுக்க வேண்டுமென்று தந்தியடித்தார். வைசிராய் பேட்டியை மறுத்தார். காந்தி-இர்வின் ஒப்பந்தம் முறிந்தது.

1932ம் ஆண்டு ஜனவரிமீ 4உ காந்திஜி கைது செய்யப்பட்டு ராஜாங்கக் கைதியாகச் சிறை வைக்கப்பட்டார் VI.

1932ம் ஆண்டு பிரதம மந்திரியின் வகுப்புவாரித் திட்டமானது, தாழ்த்தப்பட்டவர்களை ராஜீயமாகப் பிரித்துவைக்கிறதென்று, உயிர்போகும் வரை உண்ணாவிரதம் இருக்கப்போவதாக அரசாங்கத்தாருக்கு அறிவித்தார். செப்டம்பர்மீ 20உ உண்ணாவிரதம் ஆரம்பித்தார். தேசத்தின் எல்லாப் பக்கங்களிலிருந்தும் தலைவர்கள் வந்து அவரைச் சந்தித்து ஓர் ஒப்பந்தம்

செய்தனர். அரசாங்கமும் அதை ஒப்புக்கொண்டது. காந்திஜீ உபவாசத்தை நிறுத்தினார். 8-5-1933ல் விடுதலையடைந்தார்.

1933ம் ஆண்டு மேமீ 18௳ ஆத்ம பரிசுத்தத்திற்காகவும் ஊழியர்களிடை இருக்கும் தூய்மைக் குறைவிற்காகவும் 21நாள் உபவாசத்தைத் தொடங்கினார். உபவாசம் வெற்றிகரமாக முடிந்தது.

ஜுலைமீ 12௳ புனாவில் தலைவர்கள் மகாநாட்டில், தாம் வைசிராயைப் பேட்டிகண்டு சமரசம் ஏற்படுத்துவதற்கும், தவறினால் தனிப்பட்ட சட்டமறுப்பு ஆரம்பிப்பதற்கும் பெரும்பாலோர் அனுமதியைப் பெற்றார். மறுமுறையும் காந்திஜீக்குப் பேட்டிகாண அனுமதி மறுக்கப்பட்டது. அதன் பயனாகச் சத்தியாக்கிரகம் நடத்த முடிவு செய்துகொண்டார். அகமதாபாத் சென்று அங்கு தான் செல்வமாகக் கருதியிருந்த ஆசிரமத்தைக் கலைத்தார். ஆசிரமத்து வாசகசாலையையும் பொது மக்களுக்கு உபயோகப் படும்படி அகமதாபாத் முனிசிபாலிட்டியாரிடம் ஒப்புவித்தார்.

1933-௵ ஜூன்மீ 18௳ தனது அன்புமிகுந்த கனிஷ்ட புதல்வர் தேவதாஸ் காந்திக்கும், ஸ்ரீமத் சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் மகள் லக்ஷ்மிக்கும் புனா பர்ணகுடியில் ஜாதிக் கலப்புமணம் செய்துவைத்தார்.

ஆகஸ்டுமீ 1௳ ஸ்திரீ புருஷ தொண்டர்களுடனும் ஸ்ரீமதி கஸ்தூரி பாயுடனும் தனிப்பட்ட சட்டமறுப்புச் செய்வதற்காக ராஸ் கிராமத்துக்கு யாத்திரை புறப்பட ஏற்பாடு செய்திருந்தார். அன்று இரவே காந்திஜீயும் மற்றவர்களும் கைது செய்யப்பட்டனர். சிறையில் காந்திஜீக்குப் பிரஷ்ட உத்திரவு சாதரா செய்து விடுதலை செய்தனர். அதற்கு அவர் வெளியில் சென்றும் அந்த உத்தரவிற்கு இணங்க மறுக்கவே மீண்டும் கைது செய்யப்பட்டுச் சிறையிலேயே விசாரித்து ஒருவருட தண்டனை விதிக்கப்பட்டார் VII.

1933-௵ ஆகஸ்ட்மீ 16௳ பகல் 12 மணிக்கு காந்திஜீ, தமக்கு ஜெயிலில் தீண்டாமை விலக்குக்காகவேண்டிய வசதிகள் சர்க்கார் அளிக்காததால் அவர் நீடித்தகால உபவாசத்தை ஆரம்பித்தார். உடனே சர்க்கார் அவரை ஜெயிலிலிருந்து 1933-௵ ஆகஸ்ட்மீ 23௳ விடுவித்தனர்.

1933-ஞு செப்டம்பர்மீ 7உ வார்தாவில் யாத்திரை ஆரம்பித்து 1934-ஞு மார்ச்சுமீ வரையில், மத்திய மாகாணம், பீஹார், டில்லி, ஆந்திரம், தமிழ்நாடு, மலையாளம், மைசூர், கர்னுடகம், குடகு முதலிய தேசங்களில் ஹரிஜனங்கள் முன்னேற்றத்திற்காகச்சுற்றுப்பிரயாணம் செய்ததில் 375000ரூபாய் காணிக்கையாகக் கிடைக்கப் பெற்ருர். 1934-ஞு மார்ச்சுமீ முதல் பீஹாரில் பூகம்பத்தால் நஷ்டமடைந்த ஜனங்களுக்கு உதவிசெய்யச் சுற்றுப்பிரயாணம் செய்தும் ஓரிசாவில் கால்நடை யாத்திரை செய்தும் பம்பாய், புனு, கூர்ஜரம் முதலிய தேசங்களில் ஹரிஜன இயக்கத்தை விர்த்தி செய்தும் நிதி திரட்டியும் வருகிருர். ஜூன் மாதத்தில் அவருடைய மோட்டார் சனுதனிகளால் கல்லால் அடித்து சேதப்படுத்தியும், ஜூன்மீ 25உ அவர் புனுவுக்கு வந்தபோது சனுதனிகளால் அவர் காருக்கு முன் வந்த காரின்மேல் அவர் கார் என்று கருதி வெடிகுண்டு எறிந்து சிலருக்குக்காயம் உண்டாக்கினுர்கள். அவர் கார் மூன்று நிமிஷத்துக்குப் பிறகு வந்தபடியால் உயிர் தப்பிப் பிழைத்தார்.

## 30. காந்திஜீ சரித்திர முடிவுரை.

1869—1875 போர்பந்தரில் பாலப்பருவம், தவழ்தல், வளருதல், ஒத்த வயதினரோடு விளையாடல்.

1876—1887 இராஜகோட்டையில் சன்மானமும் உபகாரச் சம்பளமும் பெற்றுக் கல்வி பயிலல், சத்தியசந்தராக இருந்து இல்லறம் நடத்தல், மகப்பேறடைதல்.

1887—1891 லண்டன்மா நகரில் பாரிஸ்டர் தொழிலுக்கு படித்துப் பாரிஸ்டராதல். தானே சலவை, க்ஷவரம் செய்து கொள்ளல், சுயம்பாகம் செய்தல்.

1891—1893 பம்பாய்நகரில் பாரிஸ்டர் தொழில் செய்தல்.

1893—1914 தென்னுப்பிரிக்காவில் ராஜீய உழைப்பில் இருத்தல், பாரிஸ்டர் தொழில் செய்தல், பிரமசரிய விரதம் கொள்ளல், சிறைபுகுதல், தோட்டிவேலை செய்தல், கைவிலங்கு பூண்டு சுமை சுமத்தல், காங்கிரஸ் சபை ஸ்தாபித்தல்.

1914—1918 இந்தியாவில் அரசாங்கத்தாருடன் ஒத்துழைத்து, போயர் யுத்தம் ஜெர்மன் யுத்தம் ஜூலுப்புரக்ஷியில் பிரதம சிகிச்சைப் படைத்தலைவராயிருந்து காயம்பட்டவர்

களுக்குச் சிகிச்சை செய்தல், டோலி தூக்கல், கெய்சர் ஹிந்து மெடல் பெறல், மாண்டேகு சீர்திருத்தத்தை ஏற்று வேலை செய்தல்.

**1919--1933** அரசாங்கத்தாரோடு ஒத்துழையாமை இயக்கம் ஆரம்பித்து, இராஜீய ஊழியம், காங்கிரஸ் ஊழியம் செய்தல், சிறைப்படல், கதர் விருத்தி செய்தல், நூல் நூற்றல், சத்தியாக்கிரஹம் செய்தல், பத்திரிகை நடத்தல், ஆயுட்கால பிரமசரிய விரதம் கொள்ளல், உபவாசம், தீண்டாமை விலக்கல், சாத்வீகச் சட்டமறுப்பு செய்தல்.

**1933—1934** ஹரிஜன முன்னேற்றத்திற்கு சுற்றுப் பிரயாணம் செய்து நிதி திரட்டல், பீஹார் பூகம்ப நிவாரணத்துக்கு நிதி திரட்டிக் கஷ்டப்பட்டவர்களுக்கு உதவிபுரிதல், சட்டமறுப்பை நிறுத்தல் முதலியன.

**1933, 1934**ம் வருஷங்களில் இப்பாரதகண்டத்தின் அநேக க்ஷேத்திரங்களுக்கு ஹரிஜன சேவைக்காகத் திக்விஜயம்செய்து, பக்த கோடிகளுக்குத் தரிசனம் கொடுத்து வருகையில், மகாத்மா காந்தியடிகளின் சீர்பாதமே தஞ்சமென்று கடலூர் சிறையில் ஓராண்டு தவமியற்றிய எனது ஏகபுத்திர ரெத்தினம் தியாகராஜனும், அன்னாரின் குரு ரெத்தினசாமி கவிராயரும் தம் வரவுக்குப் பசுங்கன்று கதறுமாறு கதறிய ஒலிகேட்டுப் பரிந்து ஓடிவரும் பசுவைப்போல் **1934**-ம் பிப்ரவரிமீ **15**உ குருவாரம் தஞ்சை ஜில்லா **கோரடாச்சேரிக்கு** ஓடிவந்து திருவடி தரிசனம் கொடுத்து அன்னாரின் பிதா துரைசாமி செப்பிய அஷ்டோத்திர சதத்தையும் அவரது திருவிளையாடல் சரிதங்களையும் திருவுளம்பற்றித் தம் திருநாமமும் வரைந்தருளினர். இவரை ஒப்பாரும் மிக்காருமிலர்.

வாழ்க நீ எம்மான், இத்த வையகத்து நாட்டிலெல்லாம்
தாழ்வுற்று வறுமை மிஞ்சி, விடுதலை தவறிக் கெட்டுப்
பாழ்பட்டு நின்ற தாமோர், பாரத தேசந்தன்னை
வாழ்விக்க வந்த காந்தி மகாத்மா! வாழ்க! வாழ்க!!

ஓம் தத் ஸத்.

**மே. ச. துரைசாமி பிள்ளை,**
சரஸ்வதிமால் & மண்டி தலைவர்,
கோரடாச்சேரி.

171603

பாரதி பிரஸ், மன்னார்குடி.



உ

# அட்டவணை.


| தொடர்ந்த நெ. | | பக்கம். |
|---|---|---|
| | முகவுரை | |
| 1. | அஷ்டோத்ர சத நாமாவளி ... | 1 |
| 2. | வம்சம் ... ... | 3 |
| 3. | ஜெனனம் ... ... | 3 |
| 4. | கல்வி ... ... | 3 |
| 5. | குடும்ப வாழ்க்கை... ... | 4 |
| 6. | சத்தியம் ... ... | 5 |
| 7. | பிரமசரியம் ... ... | 7 |
| 8. | அஹிம்ஸை ... ... | 9 |
| 9. | ஆன்ம சக்தி ... ... | 10 |
| 10. | சமபாவம் ... ... | 11 |
| 11. | உபவாசம் ... ... | 12 |
| 12. | எளிய வாழ்க்கை ... ... | 14 |
| 13. | ஆகாரம் ... ... | 15 |
| 14. | கைராட்டினம் ... ... | 15 |
| 15. | தீண்டாமை ... ... | 16 |
| 16. | தொழில் ... ... | 17 |
| 17. | சுயராஜ்ஜியம் ... ... | 18 |
| 18. | காங்கிரஸ் ... ... | 18 |
| 19. | சாத்வீகச் சட்டமறுப்பு ... | 19 |
| 20. | சத்தியாக்கிரஹம் ... ... | 20 |
| 21. | ஒத்துழைத்தல் ... ... | 22 |
| 22. | ஒத்துழையாமை ... ... | 23 |
| 23. | அவமானமும் கஷ்டமும் ... | 27 |
| 24. | சிறைவாசம் ... ... | 28 |
| 25. | மலர்மாலை ... ... | 31 |
| 26. | புகழ்மாலை ... ... | 33 |
| 27. | கொரடாச்சேரி விஜயக்காட்சி ... | 41 |
| 28. | திருவுருவக்காட்சி... ... | 43 |
| 29. | மகாத்மா சரித்திர முக்கிய குறிப்புகள் | 43 |
| 30. | சரித்திர முடிவுரை ... | 55 |




# மகாத்மா காந்தியின் நூல்கள்.

| | | | ரூ. அ. ப. |
|---|---|---|---|
| 1. | சத்தியசோதனை 1-ம் பாகம் | .... | 1—8—0 |
| 2. | ஷை 2-ம் பாகம் | .... | 2—0—0 |
| 3. | ரோலண்டு காந்தி .... | .... | 0—4—0 |
| 4. | மகா தியாகம் .... | .... | 0—4—0 |
| 5. | அனாஸக்தி யோகம் .... | .... | 0—4—0 |
| 6. | இல்லற மகாரகசியம் .... | .... | 0—4—0 |
| 7. | மகாத்மா தத்துவம் .... | .... | 0—4—0 |
| 8. | கைராட்டை சரிதம் .... | .... | 0—4—0 |
| 9. | சத்திய சமாஜம் .... | .... | 0—4—0 |
| 10. | இந்தியக் கடன் பொறுப்பு .... | .... | 0—4—0 |
| 11. | ஆரோக்கிய வழி .... | .... | 0—4—0 |
| 12. | நீதி தர்மம் .... .... | .... | 0—2—0 |
| 13. | கீதாபோதனை .... .... | .... | 0—2—0 |
| 14. | இல்லறமும் பிரமசரியமும் .... | .... | 0—6—0 |
| 15. | தென்னாப்பிரிக்கா சத்தியாக்கிரகம் | .... | 1—0—0 |
| 16. | மகாத்மா காந்திஜீ அஷ்டோத்ர சதமும் சரித்திர சங்கிரகமும் | | 0—4—0 |
| 17. | ஷை முதல் பதிப்பு .... | .... | 0—1—0 |
| 18. | ஷை அஷ்டோத்திர சதம் | .... | 0—0—3 |

இவைகள் சுதேசமித்திரன் ரேயில்வே புத்தகசாலைகளிலும், 16, 17, 18 நெ. புஸ்தகங்கள் தஞ்சை ஜில்லா கோரடாச்சேரி சரஸ்வதிமால் மானேஜரிடமும் கிடைக்கும்.